# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

Page. No. 417.

Acc. No. 18586.



| | | |
|---|---|---|
| மலர்: 8<br>இதழ்: 9<br>விலை அ. 4 | துன்முகி ௵ மார்கழி ௴<br>டிசம்பர் '56—ஜனவரி '57 | வருட சந்தா<br>ரூ. 2-4-0 |





எங்கள் அப்பரே! வருக என்று நாவுக்கரசைச்
சீகாழியில் சம்பந்தர் வரவேற்றல்.

(பெரியபுராணச் சித்திர விளக்கம் 33 பக்கம் 524)

## பொருளடக்கம்


பக்கம்

1. உரவோடு ஒன்றும் ஹரி (திருப்புகழ்மணி) ... 485
2. சல்லாப விநோதன் (தி. வா. ஜகந்நாதன்) ... 487
3. சரவண மூப்பனர் (ரசபதி) ... 491
4. அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும் (திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம்பிள்ளை B.A.B.T.,) 497
5. பக்தியின் சக்தி (ஆ. கி. ரங்கராஜன்) ... 504
6. மாணிக்க வாசகர் (எம். பி. தியாகராஜன்) ... 511
7. தணிகைத் திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 516
8. நாவுக்கரசரும் சம்பந்தரும் (கி. வா. ஜ.) ... 524
9. திருவார்த்தை (சி. வி. சுப்ரமண்யம்) ... 527
10. Blessed are the peace-makers for theirs is the kingdom of heaven *(Thiruppugal Mani)* ... 531


---

### அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 9—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

**அமிர்தவசனி**

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

| மலர் 8 | துன்முகி ஹூ மார்கழி மீ<br>டிசம்பர்-56—ஜனவரி-57 | இதழ் 9 |
|---|---|---|

# "உரலோடு ஒன்றும் ஹரி"

## (திருப்புகழ் மணி)

ஸ்ரீ அருணகிரியார் முருகனை மஹாவிஷ்ணுவின் மருகன், மனமகிழ்ந்த மருகன் என்று நினைந்து நினைந்து ஆனந்தம் கொள்கின்றார். மகாவிஷ்ணுவாகிய ஹரியின் லக்ஷணங்களை போற்றுகின்றார். ஹரி சிகர குடை பிடித்து ஜீவராசிகளைக் காத்து ரக்ஷிக்கின்றார். ரக்ஷித்துக்கொண்டே இருக்கின்றாராம். கனத்த சரீரத்தைப் பெற்றவர்களாய், பிறர்கள் உதவியில்லாமல் உலாவவும் ஓடவும் திரியவும் மானிடருக்கு சக்தி கொடுத்தது யார்? கோவர்த்தன கிரியைத் தூக்கி ஒரு விரலில் வைத்து ரக்ஷித்த ஹரி சக்தியல்லவோ அது. உயிர்தோறும் உடல்தோறும் அந்த ஹரி நிற்க, மலைபோல் உலவித் திரியும் ஜீவராசிகளை யெல்லாம் தூக்கியும் நடிக்க வைத்தும் லீலைகளை இயற்றுவதும் அந்த ஹரிதான். உடலெனும் கோவர்த்தனத்தை

---

கண்ணால் மனத்தால் கண்டுன்னை யான்கருத
அண்ணா மலையாய் அடியேற் கருளுதியோ.

ஹரி தூக்காமல் போனால் உலகமேதோ! குடைபோல் கவிழ்ந்து நிற்கும் தலையை முதுகெலும்பின் மேல், நிறுவி, ஜீவனாகிய உயிர்களை யெல்லாம் அந்தக் குடையின் நிழலில் நிற்க ரக்ஷித்து, குடையின் கீழ் தானும் சுஷும்னாவில் நடிக்கவே ஸ்ருஷ்டியை வளர்க்கின்ற கருணையைப் போற்றுகின்றார்.

"சிகர குடையினில் நிரைவர இசைதெரி சதுர"னும் என்றார்.

உரல்போல் ஜடமாய்க் காணப்படும் உடம்பினில் ஒன்றியே நிற்கும் ஹரியை "உரலோடு ஒன்றும் ஹரி" என்றார்.

ஒன்றுவதும் ஒன்றுதான். அது ஹரி. அந்த ஹரி ஒன்றுதான் என்றார் சித்தர்.

"ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே"

"அரவு பொன் முடிமிசை திமித திமிதிமி திமியென நடமிடும் ஹரி" என்றார்.

மாயை யெனும் கிரியை தூள் செய்தான் மருகன். மாயை யொழிந்தது. காக்ஷி நிறைந்து விட்டது. நடமிடும் ஹரி தோன்றுகின்றானும். அந்த ஹரியின் அவதாரங்களில் ஈடுபட்டார் ஸ்ரீ அருணகிரி.

"நவநீதமும் திருடி உரலோடே ஒன்றும் ஹரி ரகுராமர் சிந்தை மகிழ் மருகோனே."

மார்கழி மாதம் ஹரிக்குகந்த மாதம் வரலாச்சுது. திருத்தணி புகைவண்டித் தொடரில் அமாவாசையன்று

---

வேகம் படுமுரையால் யான்வழுக்கி வீழுமுனே
ஏகம்பத் தெந்தாய் எனையீர்த்துக் கொள்ளாயோ.

தொண்டர்கள் புறப்படுவார்கள். எஞ்சின் இல்லா விட்டால் தொடர் வண்டிகள் ஓடாது. தொண்டர்களின் பக்தியில் நிறைந்த ஹரி மருகனன்றே பக்த தொடரை இழுத்துச் செல்வான். மாமன் வெறும் உரலை இழுத்துச் சென்று மோக்ஷம் கொடுத்தான். அவன் மருகனோ உரல் தொடரன்று, அதனினும் கனத்த பக்த தொடரை இழுத்துச் செல்லுகின்றான். இன்னமும் இழுத்துச் செல்வான். வாருமே பாருளீர்!

''மயிலையும் அவன் திருக்கை அயிலையும் அவன் கடைக்கண் இயலையும் நினைந்திருக்க வாருமே-பெருத்த பாருளீர்.''

---

அநுபூதி விளக்கம்-7

## சல்லாப விநோதன்

(கி. வா. ஜகந்நாதன்.)

முருகப் பெருமானுடைய திருவருளால் ஆனந்த அநுபவத்தைப் பெற்ற அருணகிரிநாதர், அந்த அநுபூதியைப் பாட்டிலுல் பாடலாம் என்று புகுந்தார். அதுவோ, இன்னவாறு இருந்தது என்று பிறருக்கு எடுத்துச் சொல்ல இயலாதது. "பேசா அநுபூதி பிறந்ததுவே" என்று பின்னாலே பாடுகிறார். அவர் பெற்றது பேசா அநுபூதி. ஆனால் அவர் நமக்குத் தந்தது பேசும் அநுபூதி. அவர் பாடியது தானே அது ?

அநுபூதியைப் பாட வேண்டும் என்று தொடங்கி விட்டார். பஞ்சக்கர ஆனையின் பதத்தைப் பணிந்து, ஆடும் பரியையும் வேலையும் அணி சேவலையும் பாடினார். அநுபூதியை யல்லவா சொல்லவேண்டும்? சொல்ல இயலாததென்று

---

உச்சிமேல் தாளுன்றி உயர்தீக்கை செய்பவன்நீ
கச்சிமேற் றளியெண்ணும் என்காதல் காணுயோ.

இதுவரைக்கும் எல்லோரும் சொல்லிச் சொல்லிக் கைவிட்டது அது. அதை எப்படிச் சொல்வது?—இந்த எண்ணம் அவருக்கு உண்டாயிற்று.

ஒரு தாய் தன் குழந்தைக்கு ஒரு தின்பண்டத்தைத் தந்தாள். அது மிக்க இனிமையாக இருந்தது. குழந்தை அதைச் சுவைத்துச் சுவைத்துத் தின்றது. தின்ற ஆனந்தத்தில் அது கூத்தாடியது. அப்போது அதைக் கண்ட வேறு ஒரு குழந்தை, "நீ என்ன தின்ருய்?" என்று கேட்டது.

"அம்மா தந்த தின்பண்டத்தைத் தின்றேன்" என்றது ஆனந்தம் பெற்ற குழந்தை.

"அதன் பேர் என்ன? அது எப்படி இருந்தது?" என்று பக்கத்து வீட்டுக் குழந்தை கேட்டது.

"அதன் பேர் எனக்குத் தெரியாதே! எப்படி இருந்ததென்று சொல்லவும் தெரியாதே!" என்று குழந்தை தடுமாறியது. பிறகு, "இதோ அம்மாவிடம் கேட்டுச் சொல்கிறேன்" என்று சொல்லி அன்னையிடம் ஓடியது.

"அம்மா! நீ எனக்குத் தந்த தின்பண்டத்தின் பேர் என்ன? அது நன்ருக இருந்ததே! அது என்ன? ஏன் அப்படி இருந்தது? அதை எப்படிச் சொல்வது? நீ சொல் அம்மா!" என்று குழந்தை கேட்டது.

அந்தக் குழந்தையின் நிலையில் நின்று பேசுகிருர் அருணகிரியார். "முருகா, நான் பெற்ற இன்பத்தைப் பற்றிச் சொல்ல எனக்கு ஆற்றல் இல்லை. நீ சொல் அப்பா. நீ சொல்ல, அதனைக் கேட்டு நான் மற்றவர்களுக்குச் சொல்கிறேன்" என்று வேண்டுகிருர். இந்த வேண்டுகோளே கந்தர் அநுபூதியின் இரண்டாவது பாட்டு.

★

"நீ யார் யார் எதை எதைக் கேட்கிருர்களோ, அவற்றையெல்லாம் விளையாட்டாகவே சொல்லுகின்ற பெருமான் அல்லவா?" என்று கேட்டுக் கொண்டு, பிறகு "நான் பெற்ற இன்பத்தின் வகையை நீ சொல் அப்பா" என்று வேண்டுகிருர்.

---

**அநேகம் குறையன் அறிவிலியென் றெண்ணமல்**
**அநேகதங் காபதத்தாய் ஆளவெனை யெண்ணுயோ.**

முருகன் குழந்தையாதலின் அவன் செய்வன யாவுமே விளையாட்டுத்தான். இறைவன் எந்தக் கோலத்தில் எழுந்தருளி எந்தச் செயலைச் செய்தாலும் அதைத் திருவிளையாட்டு என்று சொல்வது வழக்கம்.

"உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர்; அன்னவர்க் கேசரண் நாங்களே"

என்று கம்பர் பாடுகிறார். மதுரைப் பெருமான் செய்த செயல்களைக் கூறும் புராணத்துக்குத் திருவிளையாடற் புராணம் என்ற பெயர் வழங்குகிறது.

இறைவன் செய்வன அத்தனையும் விளையாட்டு என்பதன் கருத்து என்ன? அந்தச் செயல்களால் அவனுக்கு ஒரு தளர்ச்சி இல்லை; விருப்பு வெறுப்புக் காரணமாகச் செய்வன அல்ல அவை. விளையாட்டு என்ற சொல் உலகியலில் குழந்தைகளின் செயலுக்கு வழங்குகிறது.

" தீராத விளையாட்டுப் பிள்ளை "

என்று பாரதியார் பாடுகிறார். இறைவன் செயல்கள் விளையாட்டானால் அவன் குழந்தையைப் போன்றவனாகத் தானே இருக்க வேண்டும்? அவன் திருவுள்ளம் குழந்தையைப் போன்ற உள்ளம் என்று கூறலாம். அவன் திருமேனியும் குழந்தை யுருவாக இருந்தால், அவன் செய்வன அனைத்தும் விளையாடல்கள் என்பதை மறவாமல் இருக்கலாம். முருகக் குழந்தையின் உருவம் அந்த வகையில் அமைந்திருக்கிறது.

முருகன் தேவர்களுக்கு அடைக்கலம் தருகிறான்; அது விளையாட்டு. அழுகிறான்; சரவணப் பூந்தொட்டிலில் ஆடுகிறான்; அவை அவன் விளையாட்டு. நாரதர் யாகத்தில் தோன்றிய ஆட்டை அடக்கி அதன் மேல் ஏறி நடத்துகிறான்; அதுவும் விளையாட்டு. அவன் பேசுகிறான்; மழலைச் சொல் சொல்கிறான். எல்லாம் விளையாட்டு. அவனுடைய சல்லாபம், பேச்சு விளையாடலாகவே இருக்கிறது. பேச்

சையே விளையாட்டாக உடைய பெருமான் அவன்; சல்லாப விநோதன்.

முருகன் பேசிய பேச்சு ஒன்று இரண்டா? அவன் கிருத்திகை மகளிருடன் பேசியிருப்பான்; இந்திராதி தேவர்களுடன் பேசியிருப்பான்; உமையம்மையுடன் பேசியிருப்பான்; அவன் சிவபெருமானுடன் பேசி மகிழ்வித்திருப்பான். அவன் தந்தையுடன் ஒருவரும் அறியாமல் பேசினான்; பிரணவப் பொருளைச் சொன்னான். இந்தச் சல்லாபத்தால் அவனுக்குக் குமரகுருபரன் என்ற திருநாமமே உண்டாகியது. அகத்தியருடன் பேசித் தமிழ் உணர்த்தினான். வள்ளிநாயகியுடன் முதலில் கெஞ்சிப் பேசினான்; பின்பு கொஞ்சிப் பேசினான். பல யோகியர்களின் உள் நின்று பேசினான்.

இத்தகைய சல்லாப விநோதங்கள் அருணகிரியாருடைய நினைவுக்கு வந்தன. "முருகா, நீ எத்தனையோ வகையான சல்லாபங்களை விநோதமாகவே, விளையாட்டாகவே செய்தவனாயிற்றே. எனக்கு இதைச் சொல்" என்று வேண்டுகிறார்.

அவன் இன்ன இன்ன சமயத்தில் இன்ன இன்ன சல்லாபத்தைச் செய்தான் என்று தனித் தனியே சுட்டிக் காட்டவில்லை அருணகிரியார். பொதுவாக அவற்றை மூன்று வகையாகப் பிரித்துச் சொல்கிறார்.

**உல்லாச நிராகுல யோக விதச்**
**சல்லாப விநோதனும் நீஅலையோ ?**

அவன் உல்லாச சல்லாப விநோதன்; நிராகுல சல்லாப விநோதன்; யோக சல்லாப விநோதன். இவற்றிலும் பல பல வகை, விதம், உண்டு. உல்லாசச் சல்லாபத்திலே பல விதம் உண்டு; அவற்றிலே வல்லவன் முருகன். நிராகுல விதம் பல; அவற்றைச் சல்லாபிக்கும் விநோதன் அவன். யோக விதங்களில் அவன் சல்லாபிக்கத் தொடங்கினால் அதற்குக் கங்கு கரையே இராது. "இத்தனை விதமான சல்லாபமாகிய திருவிளையாடலைப் புரிகிறவன் அல்லவா? உனக்கு நான் கேட்பதைச் சொல்வது அரிதாகுமா?" என்பது அருணகிரியார் குறிப்பு. (தொடரும்.)

**ஓணகாந் தன்தளிவாழ் ஓங்கார மூர்த்தியெனை**
**மாணும் திருவடிக்கீழ் மன்னவைத்தால் ஆகாதோ.**

# சரவண மூப்பனார்

(ரசபதி)

பாவலர் பாடும் பாண்டி நாட்டில், அசுரர் ஆக்கம் அழித்த பதி; தேவர் ஏக்கம் தீர்த்த தலம்; சேவல் கொடியோன் திருச்செந்தூர் என்று புகல்கிறது புராணம். சிறந்த அத் தலத்தைச் சார்ந்தது ஒரு சிற்றூர். சத்தியத் தொண்டர்கள், ஆதி நாள் முதல், சித்தி பெற்ற சிறந்த ஊர் அது.

வாழும் அவ்வூரில் ஒரு வர்த்தகர். கம்பீரமான தோற்றம். அவர் பெயர் சரவண மூப்பனார். வாணிபத்தைப் பல உருவில் வளர்த்த அவர்க்கு, அரிய ஒரு கோழிப் பண்ணை அமைக்கும் ஆசை பிறந்தது.

சண்டைக் கோழி, காட்டுக் கோழி, குறுங் கோழி, கானங் கோழி, சம்பங் கோழி, வான் கோழி முதலிய பலவகைக் கோழிகளை, சேவல்களை, விரும்பி மகிழ்ந்து விலைக்கு வாங்கினார்.

அன்றே திருச்செந்தூரை அணுகினார். இன்ப முருகனை இறைஞ்சினார்.

செந்தில் அதிபா! சுந்தரா முதலே! குஞ்சுகள் பெருகி, என் கோழிப் பண்ணை சிறக்க அருள்! வாழ்ந்து வம்ச பரம்பரை வளருமாயின், விலையைப் பெருக்கி விற்பேன். வரவிற் பாதியை, சந்நிதிக்கே வழங்குகிறேன் என்று, சிறக்கப் பிரார்த்தனை செய்தார்.

நினைவார் விருப்பத்தை நிறைவேற்றும் மயிலூரும் பெருமான், பேரருள் தழைத்துப் பெருகியது.

முட்டைகள் மொய்த்தன. குஞ்சுகள் பெருகின. மூன்று ஆண்டுகட்குள், கோழிப் பண்ணையில் குதூகலம் வளர்ந்தது.

மனித மனந்தானே; மகிழ்ச்சி பெருகியதும், மறதி பிறந்தது. நிறைவேற்ற வேண்டிய பிரார்த்தனை, நினைவிலிருந்தே நீங்கியது.

ஒரு நாள் மூப்பனார், வரத கந்தனைச் சேவிக்க, செந்தில் பதிக்கு வந்தார். முருகன் திருமுன் விழுந்து வணங்கினார்.

துன்பம் வந்தபோது தெய்வம் தொழுவதும், இன்பம் வந்தபோது இறைவனை மறப்பதும், உயிர்களின் இயல்பு. இந்த நிலையினர் பலர்.

---

**வன்மொழியால் மற்றவர்தம் மனநோகச் செய்யாமல்**
**இன்மொழியால் ஆசி இனிதுபெறச் செய்யாயோ.**

சேந்தா! ஆறுமுக காந்தா! வீறுதரு வேந்தே! திருச் சீரலைவாய்த் 'தேவ தேவ தேவாதி தேவப் பெருமானே!' கண் பார் அப்பா! கவலை தீர் அத்தா என்று, எடுத்த குரல் கொண்டு ஏத்துகின்றனர் அவர்.

எப்பற்றும் இல்லாமல், "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் மாபெரும் மன நிலையில், பக்தியுடன் விசாகனைப் பாடுகின்றாரும் சிலர் உளர்.

அவர்களுள் ஒருவர் தலைசிறந்த அன்பர். திடீரென்று அவர் மேனி சிலிர்த்தது. வாய் மொருவியது. பற்களைக் கடித்தார். திமிறினர். எழும்பிக் குதித்தார். பூசும் நீறுபோல் உள்ளம் புனிதரான அவர்மேல், ஆறுமுகம் ஆவேசித்திருக்கிறது.

கண்டவர் யாவரும் கை குவித்தனர். அதிர்ந்த மனத்துடன், குமரா! முருகா! குகா என்று கூவினர்.

சரவண மூப்பனே! வாக்குத் தவறினையடா! வாய்மை தவறியவனுக்கு வழிபாடும் வேண்டுமோ? சேர்ந்த செல்வத்தால் செருக்கடைந்தனே! அன்புடையவன்போல் வந்து ஆராதிக்கிறாய்! கோழிப் பண்ணையில் கொடுக்க வேண்டிய பாதிப் பணம் எங்கேடா? எங்கே? எங்கே?

அங்கு இருந்தவர்கட்கு, அந்த உறுமல் அதிர்ச்சியை அளித்தது. மூப்பனார்க்கோ, உடலாடியது; உள்ளம் அதிர்ந்தது; அச்சம் மென்மேலும் அதிகரித்தது.

உண்மை பிரபோ! உண்மை!! மாபெருந் தீவினை, மறதியைத் தந்தது. நேர்கடனை இன்றே நிறைவேற்றி விடுகிறேன். அபசாரத்தை மன்னிக்க அத்தா! என்று அலறினர்.

விரைந்து கிராமத்திற்குச் சென்றார். பண்ணையி லிருந்த கோழிகளுள், பாதியை விலை அதிகம் கூறி விற்றார். கூட்டிப் பொருளைக் கொண்டு வந்தார். குறமகள் மணாளன் கோயிலிற் சேர்த்தார்.

தன்மையிலோம்; வெகு தவறுடையோம்; கள்ளம் கொண்ட உள்ளம் உளோம்; கருணை கொண்டு எம்மை நீ காக்கவில்லையானால், விசாகா! எங்கட்கு வேறு கதி யேது? வேலிறைவா என்று விம்மி விம்மி யழுதார்.

அன்று அர்ச்சகர் ஒருவர்மேல், ஆவேசம் எழுந்தது. ஈந்த பொருளை இனிது ஏற்றேம்! என்றபடி, விமலமான பச்சிலைத் திருநீற்றை வீசிவிட்டு, மலையேறியது ஆவேசம்.

---

**பொய்சொல்லப் பின்வாங்கிப் புனிதர் புகல்கின்ற மெய்சொல்லி வாழ விமலா அருளுதியோ.**

அது கண்ட அங்கிருந்த பக்தர்கள், முதல்வன் கருணைக்குப் பாத்திரமான மூப்பனரை வணங்கினர்.

எவரிடமும் நிறையை எண்ண வேண்டும்; மாபெரும் அவர்கள் குறைகளை, மறக்க வேண்டும். குறை, பாவத்தின் கூட்டம். நிறை, புண்ணியத்தின் நியதி. இதை எண்ணித்தான், பெரியோர்கள், சிறியோரிடம் பொங்கி வழியும் குறைகளைப் பொறுக்கின்றனர். இறைவன் நியதியும் இதுவேதான்.

முன்னும் பின்னும் மூப்பனர் நல்லவர். மறதியால் தவறினராயினும், நினைவூட்டியதும், குறையை நிறைவு செய்து கொண்டார். அன்பர் விருப்பம்போல் எதையும் அளிக்கும் முருகனே, இன்ப வடிவமான இறைவன்; அதை எவரும் அறிய, கடுமை காட்டிக் கடனை வாங்கினன் கந்தப் பெருமான் என்று, இவ்வரலாற்றை உணர்கின்றனர் மேலோர்.

பிரார்த்தனை செலுத்திய பின், மூப்பனருக்கு முருக பக்தி முதிர்ந்தது. சிவ தீட்சை செய்து கொண்டார். வகைமுறையான வழிபாட்டை, சிறப்பாகக் காலம் தவறாது செய்யலானர். முருகா! முருகா என்று, உவந்து வாய் உருவேற்றிக் கொண்டிருக்கிறது.

பழைய வாணிபத்தில், ஏராளமான செல்வம் பலித்தது. ஆதலின், கோழிப் பண்ணையைக்கூட பிறரிடம் கொடுத்து விட்டார். தானுண்டு; இனிய வழிபாடு உண்டு என்று இருந்தார். சித்தம் பக்தியால் சுத்தமாயிற்று; அதன் மூலம், வித்தக ஞானம் விளைந்தது. உயர்ந்த உணர்வு உதித்தது.

செந்தில் ஆண்டவனை வழிபடுங்கள்; வாழ அது ஒன்றே வழி. இம்மையிலே செம்மை; மறுமையிலே இன்பம்; முத்திப்பேறு; அவரவர் உணர்வின்படி அருளும் அந்த அம்மான். இப்படி ஆனந்தக் கண்ணீர் அருவியெனப் பெருக, ஒவ்வொருவரிடமும் ஓயாது பேசலாயினர்.

இப்போது அவர்க்கு வயது நாற்பத்தெட்டு. சீதோஷ்ண மாறுதலால், சிறு காய்ச்சல் விளைந்தது. அது வரவர பெருகி வளர்ந்தது. முறைக் காய்ச்சலாகி முடிந்தது. அதனால் மூப்பனர், பாயும் படுக்கையுமானர்.

வயித்தியர் வந்தார். நலம் பெற்று உடல் தேற நாற்பது நாள் ஆயிற்று.

மூப்பனரே! இனி நீர் சத்தான உணவாகச் சாப்பிட வேண்டும். அப்போதுதான் உடல் பழைய உரத்தையடையும் என்றனர் மருத்துவர்.

---

**என்னைப் பிறர்புகழில் என்செவிகள் கேளாவாய்**
**நின்புகழே கேட்க நிமலா அருளுதியோ.**

எந்த மாதிரியான உணவு உண்ணலாம் என்றார் மூப்பனார். கோழி சூப்பு நல்லது என்றார் வைத்தியர்.

ஐயையோ ஐயோ!

**"கொன்றனை அனைத்தும், அனைத்தும் நினைக்கொன்றன**
**தின்றனை அனைத்தும் அனைத்தும் நினைத்தின்றன"**

என்ற பட்டினத்தார் பாடலை, எண்ணினாலும் இதயம் அதிர்கிறதே! மேலும் நான் சிவதீட்சை செய்து கொண்டவன். வகையான ஒரு கதை நினைவிற்கு வருகிறது. தயவு செய்து கேளுங்கள்!

சிறந்த புத்தரை, ஒருவர் சென்று சேவிக்க நினைத்தார். வெறும் கையாகப் போகலாமா? அருமையான மாம்பழம் ஒன்றை அறுத்தார். வகையாக இலையில் வைத்தார். கொண்டு வந்து கொடுத்தார். வீழ்ந்து அதன் பின் வணங்கினார். பழத்தைப் பார்த்த புத்தர் மனம் பதைத்தது.

ஐயோ! பார்ப்பதற்கு அழகான பழம்; சிறந்த அதன் உருவத்தைச் சிதைத்து விட்டீரே! கனிந்த அதன் முழு உருவை, இனிக் காணமுடியுமா? என்று கண்ணீர் சிந்தினாராம் அக்கருணை மூர்த்தி.

**எச்சில் என்று பூவை இகழ்ந்தோர்க்கு, உனைப் போற்றப்**
**பச்சிலையும் கிள்ளப் படுமோ பராபரமே!**

எனும் தாயுமானார் பாடலில், அவர் கருணை உள்ளத்தைக் காண்கிறோம் அல்லவா!

தெய்வக் கணபதி சந்நிதியில், தேங்காய்ச் சூறை யிட்டார் ஒருவர். அதைப் பார்த்து, ஓவென்று கதறி அழுதாராம் இராமலிங்க சுவாமிகள்.

**தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்?** என்றார் வள்ளுவர்.

ஆன்றோர் இப்படியெல்லாம் இரக்கம் கொண்டு அருளி யிருப்பதை, எண்ணும்போதே நெஞ்சம் இளகுகிறதே! வாழப் பிறந்த நாம், வழி முறை தவறலாமா?

மூப்பனாரே! வாதத்திற்கு நான் தயாராக இல்லை. நான் சொன்னபடி நீர் நடந்து கொள்ளவில்லை யானால், விரைவில் குண்டாங்கரணம் போட்டு விடுவீர்! அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்! வருகிறேன் என்று சென்றார், அந்த அசுர சாதக மருத்துவர்.

நாட்கள் பல, இடையில் நடந்தன. வரவர, உடலில் பலவீனம் வளர்ந்தது. மருத்துவர் மொழிகள், மனத்தில் வந்து வந்து

---

**முன்னடித்துப் பின்னகைக்கும் மூர்க்கர் தமைமறக்கப்**
**பொன்னடிகள் என்றன் புந்திதங்க வையாயோ.**

மருட்டின. இதுவரை காத்த நெறியைக் கைவிடலாமா? போலி வைராக்கியம் புகுந்தது; எனினும், வரவர சபலம் வலுத்தது. உடல் நலமானபின், கெட்ட அப்பழக்கத்தை விட்டு விடலாம் என்று எண்ணியது இதயம். கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையுமே.

ஒருநாள், விடியற்காலம். ஒருவரும் அறியாதபடி புறப்பட்டார். சேரிக்குச் சென்றார். ஏழெட்டுக் குஞ்சுகளை வாங்கினர். பாவமே பாவம். அவைகளின் வாழ்க்கை அன்று அதோ கதி.

விட்டு விட்டு ஆரம்பித்த பழக்கம், என்றுமே தொட்டுக் கொள்ளும் நிலை நேர்ந்தது. கெட்ட பழக்கம் கேடு தரும் அல்லவா.

மரம் செடி கொடி போல், வித்திலிருந்து மக்கள் விளைகின்றார். பிஞ்சு காய் கனிபோல், பாலர் குமாரர் கிழவராகிப் பழுக்கின்றார்! இடையில் சீலம் எனும் வேலியிட்டுச் சீர் பெறுதல் வேண்டும். இன்றேல்,

**காடு வெட்டி நிலம் திருத்திக் காட்டெருவும் போட்டு,**
**கரும்பு விட்டு கடுவிதைத்துக் களிக்கின்ற கதையாம்.**

சில சமயங்களில் தன் நிலைமையை எண்ணி மூப்பனர் மனம் திடுக்கிடும். இரண்டொரு நாள், புலால் உணவு வேண்டாம் என்ற வெறுப்பு; மறுபடியும், வாசனை சம்பந்தத்தால் விருப்பு. இப்படி அவர் நிலை, இருதலைக் கொள்ளி எறும்புபோல் ஆயிற்று. என்ன சங்கடம்!

ஒருநாள் வைகறை நான்கு மணி. எந்தச் சேரியிலும் குஞ்சுகள் கிடைக்கவில்லை. ஒரு சேவல்தான் விலைக்குக் கிடைத்தது; விதியின்றி வாங்கினர். வீடு நோக்கித் திரும்பினர். வீட்டுப் புழக்கடையில் தோட்டம். அங்கு ஒரு பெரிய கிணறு. சேரிக்குப் போய்த் திரும்பிய தீட்டுத் தீர வேண்டாமா? அதைக் கருதி, சம்பிரதாயப்படி கால் கட்டப்பட்ட சேவலை, தாழ இருந்த ஒரு மரக் கிளையில் கட்டித் தொங்கவிட்டார். கிணற்றில் இறங்கி நீராடினர். ஈர உடையுடன் கரையேறினர். நீறணிந்தார். ஆறெழுத்தை உருவேற்றிக் கொண்டே இருக்கிறர்.

படபட என்று சிறகுகளை யடித்து, கொக்கரக்கோ என்று அச் சேவல், பலதரம் குரல் எடுத்துக் கொக்கரித்தது. இது எதிர் பாராத நிகழ்ச்சி. இக் குரல் கேட்கும் அண்டை வீடுகள், தன்னைப் பற்றி என்ன நினைக்குமோ என்று இதயம் அதிர்ந்தது.

**அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்;**
**ஆதாரம் பிரமரந்திரம் ஏழும் கடந்து எட்டுவோம்.**

---

செக்கைச்சார் எள்போல் சித்தம் சிதையாமல்
முக்குற்றம் தீர முதல்வா அருளுதியோ.

**எட்டடிக் குச்சுக்குள்ளே, முருகா! எத்தனை நாள்**
**இருப்பேன்?**

**ஒரு மச்சு வீடு கட்டித் தாராய்!—திருத்தணி**
**மலையில் வேலவனே!**

*பாட்டாக இதைப் பாடியபடியே வந்த பரம முருகன் அடியார் ஒருவர், சேவல் கொக்கரிப்பைக் கேட்டு ஓடி வந்தார். அதை அனுபவினர். அப்படியா செய்தி? என்று அலறினர்.*

*முனிவர் செயல் கண்டு, மூப்பனர் நடுங்கினர். வந்து வணங்கினர். பார்த்த கண் வாங்காது சேவலைப் பார்க்கும் அவரை நோக்கினர்.*

*என்ன சுவாமி? அதை ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்?*

*சேவல் குரலைக் கேட்டாயா? அது என்ன சொல்கிறது என்று அறிந்தாயா? புனித அதன் பாஷை உனக்குப் புரிகிறதா?*

*அப்படியா? அதன் பாஷையைத் தாங்கள் அறிவீர்களா?*

*அறிவேன்; இப்போதும் அறிகிறேன்!*

*என்ன சொல்கிறது சேவல்? சொல்லுங்கள் பார்க்கலாம்?*

**மலையென்னும் வினைதீர, மறுஅற்ற புனல் மூழ்கி,**
**அலைகின்ற முழுமூடர் அறி(வு) என்னே அறிவு?**
**புலையன் தன் மலமுண்ணும் எனையுண்ணும் புலையர்க்குக்**
**குலம் என்ன? நலம் என்ன? கூ கூ என்றன கோழி.**

*இப்போது தெரிகிறதா செய்தி? வாயில்லாப் பிராணி யென்று இனியும் வாய் திறக்கலாமா?*

*அடியவர் கோலம் கண்டு, முன்னே அதிர்ந்தது உடல். இப்போதோ, மூப்பனர்க்கு நிற்கவே முடியவில்லை. கால் தள்ளாடுகிறது.*

*கேள்! நீரில் வாழ்கிறது மீன். நிலத்தில் வாழ்கிறான் மனிதன். தூண்டில் இரை விரும்பி மீன் மாண்டு போகிறது. நாப்புலனுக்கு அடிமையாகிக் கதியிழக்கிறான் நரன். சின்ன மீன்களைப் பெரிய மீன்கள் தின்று விடுகின்றன. இளைத்தவரை ஏய்த்துப் பிழைக்கிறான் பகுத்தறிவுடையான். என்ன பாவம்? இதுதானா உலகம்? கற்றதெல்லாம், விழலுக்கு இறைத்த நீர்தானா? சேவல் கொடியோன் முருகன் என்பது சிந்தையில் இருந்தால், இத்தகைய தீய செயலில் இறங்குவாயா? கடுமை காட்டியது குரல்.*

*நாணி நடுங்கி, அடியற்ற மரம்போல் வீழ்ந்தார் மூப்பனர். வீழ்ந்தது போதும் எழுந்திரு! சிந்தை திருந்து; செந்திலுக்கு வா! வா!! வா!!!*

---

தாவில் உலகைத் தாவிசுற்றி வாராமல்
கோவில்வலம் செய்துவரக் கோவேநீ கூவாயோ.

என்ன இது? திடுக்கிட்டெழுந்தார். எதிரில் இருந்த முனிவர் எங்கே? என்ன வியப்பு! அதோ அதோ, ஒரு ஒளி, திருச்செந்தூர் நோக்கிச் சென்று மறைந்தது.

கண்ணீர் பெருகக் கதறினார். ஓடினார்; ஓடியபடியே இருக்கின்றார்.

ஓ! அதோ, செந்திலாண்டவர் திருமுன் விழுந்து எழுந்து, அவர் பயந்து அலறி விம்முவதைப் பாருங்கள்!

வாக்குத் தவறிய குற்றவாளியான என்னை அன்று திருத்தினாய்! புலால் வேட்கையால் புத்திகெட்ட இன்றும் வந்து திருத்தினை! வள்ளி மணாளா! என் சிந்தையில் என்றும் இரு! உய்திக்கு அஃதே வழி. பிரபோ! பிரபோ! என்று பிரார்த்தித்தார்.

செல்வத்தை மறந்தார். குடும்பத்தை மறந்தார். தன்னையே மறந்தார். பரனையே நினைந்தார். பவித்திராரயினார். செந்திலம் பதியில் பலநாள் வந்தித்த பயனாக, பல காலம் இருந்தார். பரமன் திருவருளில் ஒருநாள் அவர் ஆன்மா பதிந்தது.

உயிர்க் கொலையும் புலைப் புசிப்பும் உடையவர்கள் பல்லோர், அயில்வேல் குமரனுக்கு அன்பராயுளர். அவ்வகையில் களங்கமான அவர்களையும், கனிவொடு பெருமான் காப்பாற்றுகின்றான். சூழ்நிலை எழுப்பி, அருளில் பயிற்சியை அளிக்கின்றான். தயவு மிகுந்து பேறும் தருகின்றான். பயனான இவைகளை அறிவிக்கும் வரலாறுகள் பலவுள.

வாழ்க முருகன் அடியவர்.

---

# அருணகிரியும் ஐம்பூதத்தலங்களும்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B A.B.T.)

(353-ஆம் பக்கத் தொடர்ச்சி)

**திருக்காளத்தி :**

திருக்காளத்தியில் நமது திருப்புகழ் முநிவரர் அருளிய பாடல்களின் கருத்தை நோக்குவாம்.

---

வன்னிதியர் முன்போய் வாழ்த்துப்பா பாடாதுன்
சன்னிதியில் என்னுடலம் சரண்படக்கண் பாராயோ.

**சிவஞானகழல்:**

திருக்காளத்திக்கு இப்போது கிடைத்துள்ள பாடல்கள் மூன்றே. அதில் ஒன்று ஆராய்வோம். திருக்காளத்தியின் தல மூர்த்தியாவார் காளத்தீசர்; தேவியார் ஞானப் பூங்கோதை. இப்பொருத்தத்தைத் திருப்புகழில் குறிப்பாகப் பெற வைக்கிறார். அறுவை வாணிகன் (துணி வியாபாரி) துணி விற்பவன், அவனிடம் போய் துணி வாங்க வேண்டும். கூல வாணிகனிடம் (தானியம் விற்பவனிடம்) தான் நெல் முதலிய தானிய வகைகள் பெறுவது கூடும். அதேபோல் ஞானப்பூங் கோதையைச் சத்தியாகக் கொண்ட சிவனார் தலத்தில்தான் சிவஞானம் கிடைக்கும் போலும். மேலும் ஞானந்தா னுருவாகிய நாயகன் முருகவேள்—அவனுக்கு ஆராத காதல் செய்யும் துவர்வாய்க் கானவர் மானாகிய வள்ளியும் சுந்தர ஞான குறமாது. ஜீமூதமூர் வலாரி மகளாகிய தேவயானைத் தேவியும் மோன ஞான முத்தி மங்கை. அவனது திருக்கை வேலும் ஞான பூரண சத்தி. அடியாரது அவஞானங் கழல வைக்கும் அழகிய திருவடிகளும் சிவஞானச் செம்பொற் கழல்களேயாம். ஆதலின் ஞான பண்டிதனுடைய சிவஞானப் பொற்கழலே தந்தருளுமாறு நமது அருணகிரி அண்ணல் வேண்டுகிறார்.

**கயிலையும் காளத்தியும் :**

காளத்தி தென்கயிலை என்பது முன்னரே கூறப்பட்டது. கயிலையின் தன்மை என்னவெனில், சிவனார் தம்மைச் சார்ந்தாரது பாச பந்தங்களை அறவே அகற்றி நல்ல சிவ புண்ணியராகச் செய்வர்—அதுபோல வெள்ளி மலையான கயிலையங்கிரியும் தன்னைச் சார்ந்தாரது பல்வேறு நிறங்களையும் தன்னுள் அடங்குமாறு மாற்றி, சிறந்த தனது கள்ளமற்ற சத்தியஞான வெள்ளொளியை வீசும் சிறப்பினை உடையது.

---

மிண்டர் வலிக்கஞ்சி மேல்பாட்டுப் பாடாமல்
தொண்டர் குழுவினரென் தோள்கோர்த்து நில்லாரோ

"பாச நீக்கித்தன் பாற்படு நல்லறம்
ஈசன் நல்கும் இயல்பென எய்தினோர்
தேசு மாற்றிச் சிறந்ததன் மெய்யொளி
வீசு கின்றது வெள்ளியங் குன்றமே"

(கச்சியப்ப சிவாசாரியர்)

ஆதலின், தென்கயிலையாகிய திருக்காளத்தியும் பாசம் அறுத்துப் பதி ஞானச் செல்வம் தரவல்லது என்பார்.

" ஞானம் பொற்—திருக்காளத்திப் பதி "

என்கிறார்.

இங்கு ஞானச் செல்வ மிகுதியும் கிடைத்தலின் ஞானக் கழலே வேண்டுகின்ற அமைதி உள்ளத்தை உருக்க வல்லதல்லவா!

திரிபுரமெரித்த சிறப்பு

தாருகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்ற திரி புரமுடையசுரர்கள் புரங்கள் மூன்றையும் அழலுந்தச்சிரித் தெரி கொளுத்தினர் சிவனார் என்பது புராண வரலாறு. 'முப்புரமாவது மும்மல காரியம்' என்பர் திருமூலர். எனவே, முப்புரம் செற்றது மும்மல நாசம் செய்ததே என்க. ஆதலின் மும்மலச் சேட்டை முற்றும் ஒழிப்பது சிவஞானமேயாம்.

காமனை எரித்ததன் கருத்து :

கயிலைப் பரமர் கல்லாலின் புடையமர்ந்து கலைகள் யாவும் கற்று வல்லார்களான சனகாதியர் நால்வர்க்கும் மோன ஞான முத்திரையாங் குறி காட்டித் தக்ஷிணாமூர்த்தி யாய் (தென்முகத் தெய்வமாய்) யோக கோலத்திருந்தார். அவரைப் போகத்தில் மோகங் கொளச் செய்தற்குக் கார் வேள் கரும்பு வில் வளைத்துச் சுரும்பு நாணேற்றி ஐம்பூங் கணை விட்டான். பற்றற்ற பரமனும் சுளித்துச் சிறிதே வேலை விழித்து நோக்கினன். உடனே அவனுடல் நீறாய் வெந்தொழிந்தது. பின் அவனது மனைவி இரதி

---

குன்றுமுகம் பெற்றெவரும் குறுகுறுத்து நோக்காமல்
என்றும் சிவனார் எழில்முகமே காணேனோ.

வேண்ட, இறைவனார் அவனை அவளுக்கு மட்டும் உருவு கொள்ளுமாறு எழுப்பித் தந்தனர் என்பது கந்த புராணம். இதன் கருத்தாவது, காமமே யில்லாதவன் கண்ணுதல் என்பதும், காமம் ஞானத்தால் அழிவுறும் என்பதுமாம்.

மேலே கூறிய இரு வரலாற்றானும், மல நாசம் செய்பவனும், மையலெனும் காமத்தை முனிந்தவனுமாகிய கண்ணுதல் சிவனார் என்பது தெளிவாயின. அத்தகையோர் அன்பு செய்யும் முருகவேளே தமக்குச் சிவஞானக் கழல் தரவல்லார் என்று,

" புரக்காடற்றுப் பொடியாய் மங்கக்
கழைச் சாபத்தைச் சடலானுங்கப்
புகைத்தீபற்றப் புகல்வோர் அன்புற்றருள் வோனே"

[திரிபுரக்காடு நீறாயழியவும், கரும்பு வில்லோனது கட்டழகுள்ள உடலழியவும் செய்த வெற்றி வீரர் அன்புற்றருளும் பெருமானே.]

**வேலுக் குணவளித்த மேன்மை :**

மும்மலமான முப்புரமெரித்த சிவனார் போல மும்மல வடிவாம் சூரனுதியரை முனிந்தவன் முருகவேள் என்க. சூரசம்மாரம் ஆணவ மல கண்டனமேயாம். சூரனைப் பிளந்தது வேல்—அதாவது மல வன்மையை மாற்றவல்லது ஞான சத்தியாம் வடிவேல் என்பதறிய வேண்டும். ஆதலின் சிவஞானப் பொற்கழல் வேண்டும் செம்மலான நமது பாவலர்,

" புடைத்தே எட்டுத் திசையோர் அஞ்சத்
தனிக்கோ லத்துப் புகுசூர் மங்கப்
புகழ்ப்போர் சத்திக்கு இரைஆ னந்தத்து
—அருள்வோனே"

[எண்திசை யுள்ளாரையும் புடைத்து அச்சங்கொள்ள பயங்கரமான வடிவுடன் புகுந்த சூரன் அழியுமாறு போரில்

---

**நன்மனத்தர் உன்னருளை நயந்துரைப்பக்கேட்டிருந்தும்
கன்மனத்தேன் அந்தோ கரையாமை என்னேயோ.**

வாகை கொள்ளும் வடிவேலுக்கு உணவாக மகிழ்ந்தருள் பவனே!] என ஞான வெற்றியை நயந்து ஓதுகிறார்.

### வேழமழைத்து வள்ளியை வேட்டது :

வள்ளியாவார் ஞானம் மிகப் பெற்றுப் பக்குவப்பட்ட நற்சீடன். ஞான பண்டிதன், சிவனாகிய வள்ளிக் குபதே சிக்க வந்த சிவஞான தேசிகன். வள்ளி உலகியலில் உழன்று ஐம்புல வேடரின் அயர்ந்து மக்கள் சுற்றம் என் னும் மாயை கொண்டு ஆண்டவனாகிய ஆன்மநாயகனை அறி யாது நிற்கிறாள். செவ்வேளாம் குமாரகுருபரன், பிரண வக் குறியான வேழ (முக விநாயகனை) மதைக் காட்டித் தடுத்தாண்டு உபதேசித்ததோடு தன்னில் அணைத்து அரு ளுகின்றான். தந்தை தாய் தமர் என்ன கட்டுண்ட பற் றுள்ள மிக்க ஆன்மா (வள்ளி) ஞானக் குறியாகிய வேழம் (யானை) கண்டு நடுங்கி அலறுகிறது. குருமணியான கும ரேசன் அப்போது அழாதே! உண்மை உறவு இதுதான் என்று உபதேசம் செய்கிறான். இதுவே, வேலைதனக் கேற்ப வேழமழைத்த வரலாற்றின் தத்துவமாகும். இக் கருத்தை பல திருப்புகழ்ப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

" வேலையன்பு கூறவந்த ஏகதந்த யானைகண்டு
வேடர் மங்கை ஓடியஞ்ச—அணைவோனே"
" ஓதுகுறமான் வனத்தில் மேவியவள் கால்பிடித்துள்
ஓம்எனும் உபதேச வித்தோடு—அணைவோனே"

இதனையெல்லாம் நோக்கியே உலகியலில் ஆழ்ந்து உய்யு நெறி மறந்து உழுத்தனாகிய எளியேனுக்கும், வள்ளி யைத் தடுத்தாண்டு உபதேசித்ததுபோல என்னைத் தடுத் தாண்டு சிவஞானக் கழல் தருக என்பதற்கு,

" திருக்கானத்தில் பரிவோடு அந்தக்
குறக்கோலத்துச் செயலாள் அஞ்சத்
' திகழ்ச் சீரத்திக்கு அழல்வா'என்னப் புணர்வோனே

---

பண்ணார் தமிழால் பாடி யுனைமகிழும்
கண்ணாவார் நட்பைக் கண்ணாரக் காட்டாயோ.

[அழகிய காட்டில் அன்பும் அழகும் மிக்க குறத்தியான வள்ளி அச்சங்கொள்ள (பிரணவச்) சீர்மிக்க இவ் யானைக்கு அஞ்சி அழாதே, (அருகில்) வா" என்று கூறி அணைத் தவனே!]

**தன்னெளிமை சாற்றி அருள் வேண்டல் :**

"பொருட் செல்வம் உடையார்க்கே இப்புவி உரியது. அதில் வாழும் உடல் கொண்ட என்னை, எனக்கு ஆண் புடையார்போல் நடிக்கும் ஐந்து சதிகாரர் புகுந்து அழிக்கும் தொழிலே விரும்பிச் செய்கிறேன். மிகவும் வருந்தித் தேடிய சமுசாரம், செல்வம் இவற்றை இன்புற அநுபவித்துக் கிளையினருடன் மகிழ்ந்து புகழுடன் இவ் உலகையே விரும்பி யிருந்து அதன் பின் கழுகும் நாயுமுண்ணக் குழியில் பிணமாய் விடும் இவ்வுடலை விரும்பி பழுதுபட்டழிவேன்.

ஆதலின் இதனையெல்லாம் திருவுளம்பற்றி முத்தி வழி பற்றி உலக மாயை குலம் குடி என்ற தளை யழிய சிவஞானக் கழல் தருக. சிவகதி பெற் குரிமையற்ற எளியேனது அகம்புகுந் தாளத்தக்க சிறப்புத் தந்தேன்று கொள்க." என்பதனை,

" சரக்கே றித்தப் பதிவாழ் தொந்தப்
பரிக்கா யத்தில் பரிவோ டைந்துச்
சதிக்கா ரர்புக் குலேமே விந்தச் செயல்மேவிச்
சலித்தே மெத்தச் சமுசா ரம்பொற்
சுகித்தே சுற்றத் தவரோ டின்பத்
தழைத்தே மெத்தத் தயவோ டிந்தக்—குடில்பேணிக்
குரக்கோ ணத்தில் கழுநா யுண்ணக்
குழிக்கே வைத்துச் சவமாய் நத்திக்
குடிற்கே நத்திப் பழுதாய் மங்கப்—படுவேனைக்
குறித்தே முத்திக் குமரு இன்பத்
தடத்தே பற்றிச் சகமா யம்பொய்க்
குலக்கால் வற்றச் சிவஞானம் பொற்கழல்தாராய்

---

நெஞ்சம் நெகிழ்ந்தே நினையுன் னும் அன்பரென
அஞ்சேலென் றென்னை அமலா அருளுதியோ.

......சிவப்பே றுக்குக் கடையேன் வந்துள்
புகச்சீர் வைத்துக் கொளுஞா னம்பொற்
றிருக்கா ளத்திப் பதிவாழ் கந்தப்—பெருமாளே"

தொகுப்புரை :

மேற்போந்தவற்றி லிருந்து நமது அருணகிரியார் திருக்காளத்தியான தென் கயிலைப் பதியில் உயிர்கள் மல மாசு நீங்கிச் சிவஞானச்செல்வம் பெறலாம் என்று உணர்த் தியது தெரிகிறது. இது போன்றே ஞானத் திருவடி மலர் தந்தெனையாள்க என்றும், உடலெடுத் துழலும் வினை மூடக் கலங்காத ஞானம் அருள்க என வேறிரண்டு திருப் புகழிலும் கூறுவது நோக்கற்பாலது.

" சிரத்தா னத்திற்—பணியாதே
செகத்தோர் பற்றைக்—குறியாதே
வருத்தாமற் றெப்—பிலதான
மலர்த்தாள் வைத்தெத்—தனையாள்வாய்"

[பிறரைத் தலைவணங்கிப் பணியாமலும், உலகோர் பற் றைக் குறியாமலும் என்னை (வலிய) வருந்தி அழைத்து இணையற்ற மலர் போன்ற தாள்கள் சூட்டி எந்தனை யாள்வாய்.]

" சங்கட னாகித் தளர்ந்து நோய்வினை
வந்துஉடல் மூடக் கலங்கி டாமதி
தந்தடி யேனைப் புரந்திடாய்—உனதருளாலே

[வருந்தித் தளர்ந்து நோயும் வினையு முடலை மூடக் கலங்காத ஞானமருளி உன் கருணையாலே காப்பாயாக.]

எனவே மெய்ஞ்ஞானம் வந்தாலன்றி அஞ்ஞான மல மாயை அகலாதென்பதே திருக்காளத்தித் திருப்புகழ் தெரிவித்தது. ஆதலால் இதனோடு வாயு தலத்தினை நிறுத்தி, மெய்ஞ்ஞான ஒளி மேவச் சிவஞான வெளி யான (ஞானகாசத்தலமான) சிதம்பரஞ் சென்று சேவிப் போம் வாரீர்!

(தொடரும்)

---

மெய்யன் இவனென்ன மேலவர்கள் பாராட்டப்
பொய்யன் நடித்ததனைப் பொறுத்தருணீ புண்ணியனே.

# பக்தியின் சக்தி

## 7. சாவித்ரி

(ஆ. கி. ரங்கராஜன்)

காலம் என்பது ஓர் சகடம் அச்சகடம் அமரர், அசுரர், மனிதர் அனைவரின் அலுவல்களையும், ஆற்றல்களை யும், ஆயுளையும் அளந்து முடிவு கட்டுவதோர் கருவியாகும்! சற்று ஆராயின், அப்பப்பா! இக் காலச்சக்கரம் எவ்வளவு யுகங்களை அளந்துள்ளது! எவ்வளவு பிரம்மாண்டமான சாம்ராஜயங்களைச் சிருஷ்டித்துள்ளது! எத்தனை ஆட்சி பீடங்களைக் கவிழ்த்துள்ளது! இச்சக்கரத்தின் விளிம்பிலே சிக்கி அழிந்த பொருள்களை அளவிடத்தான் இயலுமா? இப் பூமண்டலம் தோன்றியது முதல் ஏற்பட்ட புயல்கள்— சண்டமாருதங்கள், பூகம்பங்கள், எரிமலை குமுறல்கள், கல் மாரி, மண்மாரி....! வர்ணிக்க இயலாத கொடுமைகளையும் இச்சகடம் புரிந்துள்ளது! இச்சகடத்தைத் தன் வசப் படுத்தி உலகை நிர்ணயிப்பவனே காலன்.

இக்காலன் தர்மத்தைக் கருவியாகக் கொண்டு காலச் சக்கரத்தை இயக்குதலால் இவனுக்குக் காலதர்மன் என்றும் ஓர் பெயருண்டு. நல்லோரை ரக்ஷிக்கவும், தீயோ ரைத் தண்டிக்கவும், அறநெறியை நிலைநாட்டவும் ஆதவன் மைந்தனாய்த் தோன்றிய இவனை அந்தகன் என அழைப்பர். அந்தகன் எனில் 'குருடன்' என்ற பொருள் கொள்ளற்க!

அரசியல் விதிகளின்படி தீர விசாரிக்கும் வரை நல் லோரும் தீயோரும் இவனுக்கு சமமானவரே! அதுதான் அவனுக்கு இறைவன் விதித்துள்ள கட்டளை. அக்கட்ட ளைப்படி அவன் நடந்துகொண்டாலும் அவனை யறியாமல் சில தவறுகள் நேர்ந்து அதனால் அவன் துன்பமுற்றும் திருந்தியதுண்டு.

---

மையல் விளைவித்து மாயை புரிசெயலால்
பைய வினைப்படுகர் பாயா தருளுதியோ.

அவனது சிரத்தின்மீது பிரம்மாண்ட பர்வதமொன்று மயிர்க்காலில் கட்டிப் பிணைக்கப்பட்டு தொங்குகிறதென்றும், அவன் சற்றேனும் அறநெறி பிறழ்ந்தாலும் அக்கேசம் இற்று பர்வதத்தினால் அவன் நசுங்க நேரும் என்றும் புராணங்கள் கூறும்.

காலனை எதிர்த்து அழிந்தவர் அநேகர். வரப்பிரசாதிகளும் காலனைக் கண்டு அஞ்சினர். காலன் தனது தண்டத்தை சினம் கொண்டு ஏந்திவிட்டானாயின் அவனைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் எவர்க்குமே இலது. அறநெறி பிறழாத அவனது கொடும் சினத்தைக் கண்டவர் அவனை எமன் (கொடியவன்) எனவும் வர்ணித்தனர். தீயோரைத் தீய்த்தலால் எமனென்றும், நல்லோரை நயத்தலால்--தர்மத்தின் வழி செல்லுதலால் தர்மனென்றும், அனைவர்க்கும் தலைமை வகித்தலால் அரசனென்றும் பொருள்பட அவனை எம—தர்ம—ராஜனென அருமறைகள் அழைக்கின்றன.

ஆனால் இத்தகைய புகழ் கொண்ட அந்தகன் பக்தியின் சக்தியிடம் பன்முறை தோல்வியுற்றிருக்கிறான், மார்க்கண்டேயர், தாயுமானார், அருணகிரியார் போன்ற பெரியோர்களிடம் அவனது ஆற்றல் செயலற்று விட்டது. பாவையர் தம் பதியிடம் கொண்ட அன்பின் தன்மையும் பரமனின்மீது கொள்ளும் பக்தியைப் போன்றதேயாம்.

அரிவையர் தமது நாயகனிடம் கொள்ளும் அபார அன்பின் ஆற்றலை அமரர்களாலும் அழிக்க இயலாது. பிருந்தை நாராயணனைப் பாறை யாக்கியதும், அருந்ததி அக்னி பகவானைத் தகித்து அழித்ததும், நளாயினி சூரியோதயத்தைத் தடுத்ததும், கண்ணகி மதுரையை எரித்துச் சாம்பலாக்கியதும், அவர்களது கணவன்மாரிடம் கொண்டிருந்த பக்தியின் (கற்பின்) சக்தியேயாம்.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள? கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்.

—திருக்குறள்

முன்னென்று பின்னென்று முரணைப் பேசாமல்
என்னென்றி நீயிருந்தே இடர்தவிர்க்க வாராயோ.

சூரியனும் மங்கையரின் கற்பை எதிர்க்க ஆற்றல் உடையவனல்ல எனில், சூர்ய புத்ரனாகிய காலனும் அவ்விதிக்குக் கட்டுப்பட்டவன்தானே! அதை உணராத அவன் ஒரு சமயம் ஒரு மானிட மங்கையிடம் சென்று தோல்வியுற்றனன். அச்செய்தியை ஈண்டு பகருவோம்.

சாலவபுரி நாட்டை ஆண்ட தியுமத்சேனனுக்கு சத்யவான் என்ற புதல்வன் இருந்தான். மத்திர தேசத் தரசன் அசுவபதிக்கு சாவித்ரி என்ற புத்ரி இருந்தனள். அந்நாள் வழக்கப்படி சாவித்ரி வனத்திர அழகைக் காண உல்லாசமாய்த் தோழியருடன் வருகையில் கொடியதோர் விலங்கினால் துரத்தப்படவே, வேட்டைக்கு வந்திருந்த சத்யவான் அவ்விலங்கினைக் கொன்று சாவித்ரியை மீட்டனன். சத்யவானின் ஆற்றலையும், அழகினையும், அவன் அரச குமாரன் என்பதையும் கண்டுகொண்ட சாவித்ரி, அவனையே தனது நாயகனாகத் தன் மனதில் வரித்துக் கொண்டாள். சத்யவானும் அவளது நற்குணங்களை வியந்து, மணந்தால் அவளையே மணப்பதென்ற உறுதியுடன் திரும்பினன்.

காசினியோரின் நல்வாழ்வுக்கெனவே கலகம் விளைக்கும் நாரதர், காலனைக் கர்வபங்கம் செய்ய இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

சத்யவான் நாடு திரும்புமுன், கஜகேது என்னும் பகை மன்னனால் சத்யவானது பெற்றோர்கள் கண்களைப் பிடுங்கப் பெற்று, காட்டில் விரட்டப் பட்டனர். நாடு அபகரிக்கப் பட்டது. சத்யவான் கானகத்தில் பெற்றோரின் விருப்பத்திற்கிணங்கி, அவர்களுக்குத் தொண்டாற்றிக் கொண்டிருந்தனன்.

அசுவபதி மன்னன் தன் புத்ரிக்கு விவாகம் முடிக்கச் சுயம்வரம் நடத்த எண்ணினன். அதை அறிந்த சாவித்ரி தன் கருத்தைத் தந்தைக்குத் தெரிவித்தனள். அசுவபதி

---

மான மழிந்தே மதிகெட்டுப் போகாமல்
கானப்பே ராளா! கடையேனைக் காவாயோ.

யும் அதற்கு உடன்பட்டு சத்யவானுக்கு அவளைத் திருமணம் புரிவித்தான். முக்காலமும் உணர்ந்த முனிவரும், மூவருள் முதல்வனும் சதுர்முகனின் புதல்வரும், மூவுலகம் சென்று திரும்பும் திறனுமுடையவராகிய நாரதர் சாவித்ரியிடம் தோன்றி சத்யவான் அகால மரணமடைவானெனக் கூறினர்.

அச்சமும், ஆகுலமும் கொண்ட சாவித்ரி சத்யவானை எவ்வாறேனும் மரணத்தினின்றும் மீட்க ஓர் உபாயம் கூற வேண்டுமென நாரதரையே சரணடைந்தாள்.

நாரதர் சத்யவானின் மரணம் தவிர்க்க முடியாததென்றும், ஆனால் சர்வசக்திகளின் தாயான ராஜராஜேஸ்வரியாம் ஸ்ரீ ஸாவித்ரி தேவியை அனுதினமும் பூஜித்தால் நன்மை உண்டாகுமென்றும் கூறி, பக்தியின் சக்தி மிகவும் அபாரமானது, காலனையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது என்பதையும் விளக்கி மறைந்தார். அவர் கூறியவாறு சாவித்ரியும் பரமேஸ்வரியாம் கௌரியை சந்ததமும் தியானிக்கலானாள். இது தேவ ரகஸ்யமாதலால் தனது கணவற்கும் இவ்விஷயத்தைக் கூறாது, அவனுக்கு எத்தகைய இடையூறும் நேராத வண்ணம் காத்து வந்தாள்.

அசுவபதி தன் மகள் கானகத்தில் கணவனுடன் அல்லலுறுவதைச் சகியாது, தனது அரண்மனைக்கு அவ்விருவரையும் வருமாறு அழைத்தான். சத்யவானோ பெற்றோருக்குத் தொண்டு செய்வதே தனது கடன் எனக் கூறி விட்டான். சாவித்ரியும் கணவரோடு ஒத்து வாழ்வதே காரிகையரின் கற்பிற்கழகு எனக் கூறித் தந்தையுடன் செல்ல மறுத்து விட்டாள்.

காலச் சக்கரம் சுழன்று கொண்டிருந்தது. நாட்கள் ஓடின. நாரத முனிவர் குறிப்பிட்டவாறு ஓராண்டு சென்றது. சத்யவானின் முடிவு நாள் நெருங்கியது. சாவித்ரியின் நெஞ்சம் கலங்கியது. இதற்கிடையே சாவித்ரி தன்

---

வாரமே பேசி வழுவாமல் நித்தியம்தே
வாரமே யான்பாட வள்ளால் அருளுதியோ.

கணவன்மீது கொண்டிருந்த அன்பின் சக்தியும், தெய்வத்தை மனமுருகி வழிபடும் பக்தியின் சக்தியும் ஒருங்கே கூடிப் பிரகாசிக்கத் தொடங்கின. எனினும் அவள் அதை அறிந்தாளில்லை. கண்ணுக்கும் கருத்துக்கும் புலப்படுமா, மானஸிக சக்தி.

நாரதர் மீண்டும் தோன்றினர். "சாவித்ரீ! இன்று முதல் மூன்று நாள் இடைவிடாமல் கௌரியை நீ பூஜித்தல் வேண்டும். மூன்றுவது நாளே உன் கணவனின் கடைசி நாள். அலக்ஷியமாய் இராதே. அன்று நீ எக்காரணம் கொண்டும், உன் கணவனைப் பிரிந்திருத்தல் கூடாது. சிறிதேனும் நீ அவனை விட்டு நீங்குவாயாகில் சத்யவானது உடலினின்று உயிர் பிரியும் என்பது திண்ணம்!" என்று எச்சரித்துச் சென்றார். மூன்றும் நாளும் வந்தது. வழக்கம்போலச் சத்யவான் கோடரியை எடுத்துக்கொண்டு விறகுக்காக மரம் வெட்டப் புறப்பட்டான். சாவித்ரியும் பின் தொடர்ந்தாள்.

அந்தகனுக்கு அரிவையரின் கற்பின் மேன்மையை உணர்த்த இதுவே சமயமெனக் கருதிய நாரதர் எமபுரம் நாடிச் சென்றார். சாவித்ரியின் கற்பின் பெருமையை அவனுக்கு எடுத்து உரைத்தார். கண்ணால் காண்பது பொய், காதால் கேட்பது பொய், தீர விசாரித்து அறிவதே மெய் என்ற நியதியையே அவன் கருத்தில் கொண்டிருந்தானதலால், அவரது உபதேசமொழிகளைக் கேளாத செவிடனாய்த் தனது ஏவலர்களை அழைத்து சத்யவானது உயிரைக் கவர்ந்து வரும்படி ஏவினன்.

சத்யவானது ஆயுள் முடிவடைந்தபடியாலும், அந்தகனின் ஏவலர்கள் அணுகியபடியாலும் அங்கம் சோர்ந்து அவன் கீழே சாய்ந்தான். உடனே சாவித்ரி அவனைத் தன் தொடையின்மீது சாய்த்துக் கொண்டனள். சத்யவானது கண்கள் சுழன்றன. சாவித்ரியின் திகில் கட்டு மீறியது.

---

நெஞ்சங்கல் லானுர் நேசமகன் றுன்னடிக்கே
தஞ்சந்தஞ் சம்என்றே தகவுபெறக் கூவேனே.

சாவித்ரி சத்யவானைப் பிரியாதிருந்தபடியால் அவனை அணுகிய அந்தத் தூதர்கள் அவனது ஆவியைக் கவர இயலாதவாறு அவளது கற்பின் அக்கினியும், அம்பிகையைப் பூஜித்த பக்தியின் சக்தியும் திரண்டு அவர்களைப் பொசுக்கத் தலைப்பட்டன. அச்சமுற்ற அந்தக தூதர்கள் அவ்விடம் விட்டு நீங்கித் தங்கள் தலைவனிடம் நடந்ததை நவின்றனர். நாரத முனிவரின் நல்லுரையை மதியாத அந்தகன், ஆவேசமாய் மூண்ட கோபத்துடன் தானே புறப்பட்டு பூவுலகை அடைந்தான்.

தன் எதிரில் அந்தகனின் தோற்றத்தைக் கண்டாள் சாவித்ரி! உடனே நாரத முனிவர் கூறியிருந்த எச்சரிக்கையை மறந்து, சத்யவானைக் கீழே கிடத்தி அந்தகனின் அடி பணிந்து மாங்கல்யப் பிச்சை தர வேண்டினள். எத்தகையோரும் காண இயலாத தன் உருவத்தை சாவித்ரி கண்டுவிட்டாள் என்பதை அறிந்த அந்தகன் ஆச்சரியம் கொண்டான். இருப்பினும் சாவித்ரியின் பிழையினால் வெகு சுலபமாகச் சத்யவானது ஆவியைக் கவர்ந்து மறைந்தனன்.

அந்தகனின் தோற்றம் அன்பனின் ஆவியுடன் மறைந்ததை உணர்ந்து சாவித்ரி அலறினள். அப்போது முன் கூறிய அவளது பக்தியின் சக்தி அவளது கண்களுக்கு அந்தகனையும், அவன் செல்லுகிற வழியையும் அறிவித்தது. ககனத்திடையே செல்லும் ஆற்றலையும் அவளுக்கு அளித்தது.

தன்னை சாவித்ரி பின் தொடருகிறாள் என்றறிந்த அந்தகன், அவளுக்கு இடையூறாகத் தீயை ஆறாகப் பெருகும்படிச் செய்து மறைந்தான். ஆனால் இமைப்போதில் அதைக் கடந்துவிட்டாள் என்பதை அறிந்து வியப்பும் அச்சமும் எய்தி, எவ்வாறேனும் தனது கடமையை முடித்துக் கொள்ளக் கருதிக் கணவனின் உயிரைத் தவிர

---

தாயாகித் தந்தையாய்த் தான்குருவா வந்தவுன்றன்
நேயம்கொள் ளாமல் ஒதிமரமா நிற்பேனோ.

வேறெந்த வரமும் தரத் தயார் என அவளிடம் வாக்களித்தனன். சாவித்ரியும் அவ்வாக்குறுதியைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, அந்தகனிடம் தன்பெற்றோருக்குப் புத்ரனுண்டாகவேண்டுமென்றும், சத்யவானுடைய பெற்றோருக்கு இழந்த கண்களும், அரசுரிமையும் மீண்டும் உண்டாக வேண்டுமென்றும் வேண்டி வரங்களைப் பெற்றாள். வரங்களை அளித்த அந்தகன் மறைந்தான்.

சாவித்ரி மீண்டும் தொடர்ந்து "எனக்குப் புத்ர பாக்கியம் வேண்டும்" என்று கேட்க, "அளித்தேன்" என்று கூறி மறைய, சாவித்ரியும் தொடர்ந்து "என் பதியின் உயிரைத் தராவிடில் உமது வாக்குறுதி பொய்யாகும். வாக்குறுதி பொய்யாகி விட்டால் வல்லமையும் ஆற்றலும் குன்றி விடும். பிறகு நீர் கடவுள் என்பதை எவருமே ஒப்ப மாட்டார்கள். ஆகவே என் கணவர் உயிரைத் தர வேண்டும்" எனப் பிடிவாதம் செய்ய, காலன் திகைத்துப் பின் எவ்வாறேனும் ஆகட்டுமெனக் கூறிவிட்டுத் தனது நகருக்குள் புகுந்தான். கதவுகள் மூடிக் கொண்டன.

சாவித்ரி தனது கற்பின் மகிமையால் கதவுகளைத் திறந்து காலனை அணுகித் தன் கணவனின் உயிரைத் தராவிட்டால் சபித்து விடுவதாக மொழிந்தனள். செய்வதறியாது திகைத்த காலன் முன் அம்பிகை தோன்றினள். "எமதர்ம! பதிவிரதைகளைச் சோதியாதே! பக்தர்களைத் துன்புறுத்தாதே; சாவித்ரி எனது பக்தை; சிறந்த பதிவிரதை. உனது அதிகாரங்களும் ஆற்றலும் ஆவியும் நிலைக்க வேண்டுமாயின், அவளது சாபத்திலிருந்து தப்பவேண்டும். அதற்குச் சத்யவானின் உயிரை அளித்துவிட வேண்டும். அவளது சாபம் அனைத்துலகையும் தகிக்கும். உடனே சத்யவானின் உயிரை விடுவி. இது என் கட்டளை!" என்றனள்.

---

மாளவைக்கும் வாக்கு மனங்கொண்டார் தம்முறவு
நீள வைக்கும் நட்பை நீக்கி யருளுதியோ.

காலன் அதிக வியப்பும் அச்சமும்கொண்டு, அம்பிகை தோன்றி ஆணையிடும் அளவுக்குச் சாவித்ரியினது பக்தியின் சக்தி உயர்ந்துவிட்டதை உன்னி, சத்யவானின் உயிரை விடுவித்துச் சாவித்ரியை "நீ தீர்க்க ஸுமங்கலியாய் வாழ்க!" என்று அனுக்ரகித்து ஓர் விமானத்தில் அவளை அமர்த்திப் பூவுலகுக்கு அனுப்பினான்.

அவனது வரங்கள் யாவும் நிறைவேறின. சத்யவானும் உயிர் பெற்றெழுந்தான். இழந்த நாடு திரும்பக் கிடைத்தது. அவனது பெற்றோர்களுக்குக் கண்களும், அசுவபதி மன்னனுக்கு ஆண் சந்ததியும் உண்டாயின. சத்யவானும் சாவித்ரியும் இணைபிரியாது பல புத்ரர்களுடனும், நிறைந்த செல்வத்துடனும் வெகு காலம் பூவுலகில் வாழ்ந்து இறுதியில் அம்பிகையாம் சர்வ சக்தியுடன் ஐக்யமடைந்தனர்.

இவ்வரலாறு பக்தியின் சக்தி எத்தகையதென்பதை நமக்கு அறிவிக்கின்றதல்லவா?

பக்தியின் சக்தியால் பாரதம் உயர்க!

---

## மாணிக்க வாசகர்

(எம். பி. தியாகராசன்)

திருவாதவூரின் அருகாமையில் ஓர் கிராமம். அதில் ஒரு சிறு இல்லம். அவ்வில்லத்து வாசி ஒரு சிவ பக்தர். அவர் தெய்வ வழிபாட்டில் பெரிதும் ஈடுபாடுடையவர். குடும்ப நிர்வாகத்தை அவருடைய மனைவி கவனித்து வந்தாள். குழந்தைகளை அன்பினால் ஆளும் தன்மை வாய்ந்தவள். அவள் சொற்படி குழந்தைகள் நடந்து வந்தனர். அவர்களில் மூத்தவன் மாணிக்கவாசகன் எனப்படுவோன். சிறு வயதிலேயே தன் தாயினிடம் அவன் அடியார்கள் சரித்திரங்களைக் கேட்டு வந்தான். பக்திப் பாடல்களை தாயுடன் பாடியும் வந்தான். தந்தையுடன் கோயிலுக்குச்

---

**நல்லார் உறவும் ஞானிகள்தம் மோனமுமே**
**அல்லார் களத்தாய் அடியேற் கருளுதியோ.**

'செல்வான். எனினும் வயது முதிர முதிர சில கொள்கை கள் அவனுடைய மனதில் தோன்றி வந்தன. "கோயி லுக்குப் போகாமலிருந்தால் கடவுள் நம்மை தண்டிப்பாரா? தண்டித்தலென்பது, சினத்தால் வருவதன்றோ. "சினங் காத்துக் கொள்ளும் குணமே குணமென்க" என்று திருக் குறள் கற்பிக்கிறதே. கடவுள் எண் குணத்தானல்லவா? அப்படி யிருக்க அவன் தண்டிப்பது எவ்வண்ணம்" என்று இவ்வாறெல்லாம் சிந்திப்பது அவனுக்கு வழக்கமா யிருந்தது.

இருந்த போதிலும் வயது மிகமிக மாணவர்கள் சேர்க் கையால் உலக இயலில் அவன் மனம் சென்றது. விளை யாட்டிலும் வேடிக்கைகளிலும் உறவு கொண்டான். இடையே சில கருத்துக்கள் அவன் மனதில் தோன்றிக் கொண்டு மிருந்தன. அவனுடைய தகப்பனார் விதியை நம்பியவர். இவன் மதியின் வலிமையால் விதியையும் வெல்ல லாம் என்று உறுதி கொண்டவன். விதிவழி நம் வாழ்க்கை ஏற்பட்டிருப்பின் கடவுளை பிரார்த்திப்ப தெதற்கு? என்ற ஐயப்பாடு அவன் மனதி லுண்டாயிற்று. கோயிலுக்குச் செல்வான். ஆனால் கோயிலில் நல்லுணர்ச்சி, ஆண்டவனி டம் ஒரு வேட்கை இவை போன்ற பண்பாடு ஏற்படா மைக்கு வருந்துவான். அதனால் அப் பழக்கமும் நழுவியது. ஒருநாள் கோயிலில் ஆண்டுவிழா கொண்டாட்டம் நடந்தது. அப்போது தேவார பஜனை ஒருபுறம் நடந்துகொண்டிருந் தது. அங்குச் சென்றான். அப்போது பின்வரும் பாடல் அவன் காதில் விழுந்தது.

"நன்றுடையானை தீயதிலானை நரை வெள்ளேறு
ஒன்றுடையானை யுமையொரு பாக முடையானை
சென்றடையாத திருவுடை யானை சிராப்பள்ளிக்
குன்றுடை யானை கூற என்னுள்ளம் குளிரும்மே"

கடவுளிலக்கணம் "நன்றுடையான் தீயதிலான்" என்று கேட்டு அதை உறுதியாக நம்பினான். ஆனால் "உள்ளம்

---

தூற்றுமல் ஞானியரை, தூயகலை மேல்குறைகள்
சாற்றுமல் உண்மை சார அருள் செய்யாயோ.

குளிரவில்லையே" என்று வருந்தினான். அப் பாடலைக் கேட்க வாய்ப்பு ஏற்பட்டது ஆண்டவன் திரு அருள் என்று எண்ணி மகிழ்ந்தான். மனதில் இவ்வித ஆராய்ச்சி. புறத்தே குடும்பத் தொல்லைகள். வயது இருபத்து மூன்று ஆய்விட்டது. வருமானம் தேவையா யிருந்தது. வியா பாரத் துறையில் ஈடுபட்டான். வியாபாரம் நாணயமற்றது என்பது தகப்பனாரின் கொள்கை. வாகீசனுக்கு யௌவன வயதானபடியினால் தான் எண்ணிய வழியே சென்றான். தன்னம்பிக்கையில் பற்றுக்கொண்டு, தாய் தந்தையரையும் புறக்கணித்து, வியாபாரத் துறையில் வெளியூர் சென்றான்.

நண்பர்கள் உதவியால் ஒரு வியாபாரம் ஆரம்பித்தான். நல்ல ஊதியம் கிடைத்தது. வியாபாரம் நன்றாக நடந்தது. தாய் தந்தையரை மறந்தான். கடவுள் பக்தி, மற்ற ஆராய்ச்சிகளுக்கு நேரமில்லை. பணத்தாசை மேல் மேல் பெருகிற்று. பந்தமும் மேலிட்டது. கலியாணம் செய்து கொண்டான். ஒரு குழந்தையும் பிறந்தது. இவ்வளவும் அவனுடைய தாய் தந்தையர்களுக்குத் தெரியாது. அவர்களுடைய பிரார்த்தனை, "பிள்ளை நல்லபடி வீடுதிரும்ப வேண்டு மென்பதே!" பெற்றோரின் பிரார்த்தனையின் விளைவோ, அல்லது இவனுடைய வாழ்க்கையில் திருத்த மேற்பட வேண்டிய நல்ல காலத்தின் அறிகுறியோ, மாணிக்க வாகீசனுக்கு தூக்கமின்மை துற் சொப்பனத்தால் மனசஞ்சலம் முதலிய துன்பங்கள் ஏற்பட்டன. வியாபாரத் தின் வேகம் தடைப்பட்டது. அன்பர்களின் ஆதரவோ, பண வருவாயோ மனோ வியாகூலத்தைத் தேற்றவில்லை.

எனவே வியாபாரத் துறையில் தனது வாழ்க்கை பயன்படாது என்று எண்ணினான். தாய் தந்தையரை எண்ணி வருந்தினான். வீடு திரும்பினான். அவர்கள் இவனையும் இவன் மனைவி மக்களையும் ஆர்வத்துடன் ஏற்றுக்-

---

கோபத்தால் சொற்கள் கொதிப்பேறி யுள்வெதும்பல்
ஆபத்தாம்; எந்தாய்! அமைதிநிலை செய்யாயோ.

கொண்டனர். உண்மை அன்பின் தன்மை அப்போதுதான் அவனுக்குப் புலனாயிற்று. ஆண்டவனின் தன்மையும் அது தான் என உணர்ந்தான்.

இன்னா செய்தாரை இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

என்ற தமிழ் மறைக்கு இலக்காக வாழ்ந்த சால்பு மிக்க பெற்றோர்கள் பெற்றெடுத்த மாணிக்க வாசகன், தன் பெற்றோர்களின் அன்பை யுணர்ந்த பின், இதுவரை அவன் நாடியிருந்த மன அமைதியையும் அடைந்தான். அன்றிரவு நன்கு தூங்கினான். மறுநாள் தன் தகப்பனாரின் அன்பர் ஒருவர் தம் இல்லத்திற்கு வந்தார். அவர் அம் மாணிக்க மகனின் மனப்பாங்கை சில சம்பாஷணைகள் மூலம் உணர்ந்து கொண்டு அவருடைய தந்தையின் அநுமதியின் பேரில் ஒரு சைவப் பெரியவரிடம் அழைத்துச் சென்றார். அவரைக் கண்டவுடன் மாணிக்க வாசகருக்கு ஒரு உள்ளக் குளிர்ச்சி ஏற்பட்டது. அதுதான் சம்பந்தர் பாடிய "கூற என் உள்ளம் குளிரும்மே" என்ற அடியின் பொருளோ என்றும் எண்ணினான். அவர் மூலம் பன்னிரு திருமுறைகள், சைவ சாஸ்திர நூல்களைக் கற்றுணர்ந்தான். தன் வியாபார வாழ்க்கையில் தனக்கேற்பட்ட இடையூறுகளின் நோக்கம், ஆண்டவனின் ஆட்கொண்ட தன்மையெனப் புலனாயிற்று. அதுமுதல் தன் வாழ்க்கையைப் பிரசாரம் செய்வதிலும், பாடங் கற்பித்துக் கொடுப்பதிலும், அவைகளால் வரும் ஊதியத்தைக் கொண்டு நடத்தி வந்தான்.

அப்படிப் பிரசங்கம் செய்துவரும் போது சில உண்மைகள் அவனுக்குப் புலனாயிற்று. ஒரு கருத்தைக் குறித்து முன்னதாக என்ன என்ன சொல்ல வேண்டுமென்று யோசித்துக்கொண்டு பிரசங்கம் செய்யும்போது, கேட்போர், உணர்ச்சியோடு கேட்பதாக அவனுக்கு புலப்படவில்லை. ஆனால் அவனுடைய சொல் நயங்களைப் பாராட்டிக் கேட்பதாகத் தெரிய வந்தது. ஒருநாள் அப்பர் திரு

---

சிந்தைசெயல் வாக்குச் சிதறாமல் ஒன்றி
எந்தை நினையுணரும் இன்பம் வழங்குதியோ.

நக்ஷத்திரத்தன்று கோயிலுக்குச் சென்றிருந்த சமயம், இவனை ஒரு கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசும்படியாக தர்மகர்த்தா வேண்டினர். காரணம் அன்று தலைமை வகிக்க இருந்தவர் வரவில்லை. முன்பின் யோசியாது என்ன பேசுவது என்று தயங்கினவனாய், ஆண்டவன் நம்மைக் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையுடன், தான் சொல்வது ஆண்டவன் வாக்கென எண்ணி, 4, 5, 6, திருமுறைகளைப் பற்றி பேசினான். அன்று வந்திருந்த அனைவரும் மிக்க ஆர்வத்துடன், உணர்ச்சியுடன் கேட்பதோடு கூட்டமும் அதிகமாக சேர்ந்து விட்டது. அன்றுதான் அவன், தான் பேசுவதில் உணர்ச்சி இல்லையென்றும், "ஆண்டவன் உள்ளிருந்து பேசுவதாக எண்ணிப் பேசினால் உணர்ச்சி யிருப்பதாகவும்" உணர்ந்தான். அன்றே அவன் தன் முனைப்பை விடுத்தான்.

எனினும் மாணிக்க வாசகரை, வறுமைப் பிணிவிட்டபாடில்லை. குடும்ப நிர்வாகத்திற்குத் தன் பிரசார மூலம் பெறும் ஊதியம் போதவில்லை. அந்த நிலையில் இறைவனைப் பழிப்பாருமுளர். குறைகளைத் தீர்க்க வேண்டுவாருமுளர். தாம் செய்த தீவினைப் பயன் என்று சகிப்பாருமுளர். வறுமை இல்லையேல் ஆண்டவனை நினைக்க இடமிராது; ஆகவே வறுமை வேண்டற்பாலது என சமாதானமடைவோருமுளர். மாணிக்க வாசகர் தன் குறைகள் தீர வேண்டும் என்று பிரார்த்திக்கும் இயல்புடையவர்.

"பொன்னடியே பரவி நாளும் பூவொடு நீர்சுமக்கும்
நின்னடியா ரிடர்களையாய் நெடுங்கள மேயவனே."

எனப் பூசை முடிந்ததும், தான் சிவனடியார் என நினைந்து தன் இடர் களைய வேண்டுமெனப் பாடுபடுவார். இதை உடனிருந்து கேட்டுக்கொண்டிருந்த தன் பத்தினிக்கு ஒரு நாள் ஒரு சந்தேகம் உண்டாயிற்று. அதுவும் சிவபெருமான் உன்னிய வண்ணம் நேர்ந்ததென எண்ணவும் இடமுண்டு. அச் சந்தேகத்தைத் தெளிவு படுத்திக்கொள்ள,

---

கல்லான நெஞ்சம் கரையாதோ? சொல்லாத
சொல்லாம் உபதேசம் என்னுணர்வில் தோயாதோ.

ஒருநாள் அவர் "நன்றுடையான் தீயதிலான்" என்ற ஞானசம்பந்தர் தேவாரத்தை உருக்கமாக பாடிக்கொண் டிருந்தபோது, "சிவபெருமான் நன்றுடையான் தீயதிலான்" என்று ஞானசம்பந்தர் பாடியுள்ள போது அவர் சிருஷ்டி யில் குறைகள் உண்டாமோ? அல்லது நமக்குத் தான் குறைகள் தோன்றுகிறதா? மும்மலத்துள் மயங்கும் நம் எண்ணம் அவ்வாறு பரிணமிக்கிறதா?" என்று அவரை வினவலாயினள். அவருக்கு அக்கேள்விக்குப் பதிலளிக்க வாய் எழவில்லை. சித்தம் பலப்பல நினைக்க ஆரம்பித்தது. சிவனை நினைத்த வண்ணம் சிந்திக்கலானார். அப்போது மாணிக்க வாசகரின் பிரார்த்தனை மனதிற்கு வந்தது.

"வேண்டத் தக்க தறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ; வேண்டும் அயன்மாற் கரியோய் நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய்; வேண்டி நீ யாதருள் செய் தாய்; யானு மதுவே வேண்டி னல்லால்; வேண்டும் பரி சொன் றுண்டென்னில் அதுவுமுன்றன் விருப்பன்றே."

(தொடரும்.)

---

# தணிகைத் திருப்புகழ்

## விரிவுரை

## (குகஸ்ரீ)

நிலையாத சமுத்திர மான
சமுசார துறைக்கணின் மூழ்கி
நிசமான தெனப்பல பேசி யதனூடே

நெடுநாளும் உழைப்புள தாகி
பெரியோர்கள் இடைக்கர வாகி
நினைவால்நின் அடித்தொழில் பேணித் துதியாமல்

---

ஆழ்த்த மருள்ஞால அல்பஇன்பம் வேண்டாவே
வாழ்த்தியுனை யெண்ணின்பம் வாய்ப்ப வழங்குதியோ.

தலையான உடல்பிணி யூறி
பவநோயின் அலைப்பல ஏகி
சலமான பயித்தியம் ஆகித் தடுமாறித்
தவியாமல் பிறப்பையும் நாடி
அதுவேரை அறுத்துனை ஓதி
தலமீதில் பிழைத்திட வேகின் அருள்தாராய்;
கலியாண சுபுத்திரன் ஆக
குறமாது தனக்கு விநோத
கவினரு புயத்தில் உலாவி விளையாடிக்
களிகூரும் உனைத்துணை தேடும்
அடியேனை சுகப்பட வேவை
கடனாகும் இதுக்கனம் ஆகும் முருகோனே!
பலகாலும் உனைத்தொழு வோர்கள்
மறவாமல் திருப்புகழ் கூறி
படிமீது துதித்துடன் வாழ அருள்வேளே!
பதியான திருத்தணி மேவு
சிவலோகம் எனப்பரி வேறு
பவரோக வயித்திய நாதப் பெருமாளே!
(கலியாண—முருகோனே)

(பதவுரை.) கலியாண சுபுத்திரன் ஆக—என்றும் மணமகனாகவே (இருந்து;)

குறமாது தனக்கு விநோத - ஸ்ரீவல்லீ நாச்சியார்க்கு இன்பப் பொழுது போக்காக இருப்பவரே!;

கவின் ஆரு புயத்தில் உலாவி விளையாடி - அழகு நிறைந்த (அத்தேவியார்) திருத்தோள்களில் தழுவி விளையாடல் செய்து;

களிகூரும் உனைத் துணை தேடும் அடியேனை சுகப்படவே வை - மிக மகிழும் உம்மையே (உயிர்த் துணையாகத்) தேடித் திரியும் அடியவனை என்னை, பேரின்பத்தில் வாழுமாறு வைப்பீராக;

முருகோனே - முருகப் பெருமானே! கடன் ஆகும் இது - (இயற்கைக்) கடமையான இச்செயல், கனம் ஆகும் (உமக்குப்) பெருமையையே தரும்;

---

**பூணேன் அன்பையா! புண்ணியர்தம் நல்லாசி**
**காணேன் அடியேன், கடையாய்க் கழிவேனே.**

(பலகாலும்—அருள்வேளே.)

பலகாலும் உனைத் தொழுவோர்கள் - எக்காலத்தும் (மேலான) உம்மையே விநயம் வெளிப்பட வணங்கும் மெய்யடியர்;

மறவாமல் திருப்புகழ் கூறி - (இடையிடை வினைவலியால் உம்மை) மறவாதபடி, திருப்புகழ்களைப் பாடி;

படிமீது துதித்து உடன் வாழ அருள் வேளே - படிமேல் இருந்து துதிசெய்து, (அத்துவிதத் தொடர்பில் உம்முடன்) சிறக்க இருந்து வாழும்படி, அருள் பாலிக்கும் செவ்வேள் ஆண்டவனே!

(பதியான....பெருமாளே).

பதியான திருத்தணி மேவு சிவலோகம் என பரிவு ஏறு - பதித்தன்மை எய்திய திருத்தணிகை மலை, (யாவரும்) விரும்பி யடையும் சிவலோகம் என்று கருதி, அதன் மேல் அன்பு அதிகரிக்கும்;

பவரோக வயித்தியநாத பெருமாளே - பிறவி நோய் தீர்க்கும் (நலஞ் சிறந்த) மருத்துவ நாதனே! பிரஹ்ம ஸ்வரூபமே!

(நிலையாத...பேசி.)

நிலையாத சமுத்திரம் ஆன சமுசார துறைக்கணின் மூழ்கி - நிலை பெறுதல் இல்லாத கடல் போன்ற சம்சாரமாகிய துறையிலே, (ஆரம்பத்தில் விளையாட்டாக) முழுகி;

நிசம் ஆனது என பல பேசி - உண்மையானது என்று பல (பொய்களை நாப்புழுக்கப்) பேசி;

(அதனூடே.....துதியாமல்.)

அதனூடே நெடுநாளும் உழைப்புளது ஆகி - (அங்ஙனம் பேசும்) அப்பொய்ப் பழக்கத்தின் நடுவிலேயே பல காலம்வரை உழைப்பு அதிகரித்து;

பெரியோர்கள் இடை கரவு ஆகி - மேலோர் கூட்டத்தில் அகப்படாமல் மறைந்து ஒழுகி;

நினைவால் நின் அடித்தொழில் பேணி துதியாமல் - தியான முகத்தால் உமது திருவடித் தொண்டை விரும்பிப் புகழ்வதே தொழிலாகாமல்;

(தலையான....அருள் தாராய்.)

தலையான உடல் பிணி ஊறி - (இதற்கு மேலும் பிணி இல்லை யெனும்படி) உச்சஸ்தானமான நோய் உடம்பில் ஊறுதல் அடைந்து;

---

காடாய் அடர்ந்த கன்ம வினைத்தொடர்பால்
நாடாதுன் ஊயந்தோ நாள்வறிது சென்றதுவே.

பவ நோயின் அலைப் பல ஏகி - பிறவிப் பிணியாகிய பல அலை கள் ஈர்த்த வழி சென்று;

சல மான பயித்தியம் ஆகி - கோபம் மானம் மதிமருள்நிலை (மூன்றன்) மயம் ஆனவனாய்;

தடுமாறி தவியாமல் - நிலை குலைந்து நியதி கெடாதபடி;

பிறப்பையும் நாடி - (எதன் வழி வந்தது இத்துன்பப்) பிறப்பு என்பதையும், (இந்த அலங்கோல வாழ்வில்) சிந்திக்கச் செய்து;

உனை ஓதி அது வேரை அறுத்து - உம்மையே (மனத்தாலும் வாக்காலும் ஆக்கையாலும் எண்ணவும் ஏத்தவும் வழிபடவும்) கற்று, (அவைகளின் மூலம்) அப்பிறவி வேரை (அடியொடு) கல்லி யெறிந்து;

தல மீதில் பிழைத்திடவே நின் அருள் தாராய் - (ஆரவார மான இவ்வுலகில்,) அடியேன் உய்திபெற உமது அருளை உதவு வீராக, (எ - று).

## விரிவுரை

முருகு என்பது, அழகு, மணம், இன்பம், தெய்வம் எனும் பல பொருளொரு சொல். இவ்வகையில், கருவேளும் விரும்பும் கட்டழ கன்; மேலான அருள் மணம் கொழிக்கும் மேனியன்; பேரின்பப் பெருமான்: தெய்வங்கள் யாவும் ஏத்தும் பெருந் தெய்வம். புனித மான இத்தகைய பொருளுடைய நாமம் ஆதலின், முனிவர்கள் பலர் முருகாய நம என்று ஓதி முறுவலிக்கின்றனர். ஓத ஆரம் பிக்கும் போதே முறுவல் விளைதல்; நாவில் இன்ப நீர் சுரத்தல்; அந்நீரில் மகத்தான ஒருவகை மணம் உண்டாதல்; இன்பம் விளை தல் எவரும் உணர்வர்.

முதன்மையான இத்தகைய அனுபவம் காட்டும் முருகா! நீ சிவபோக ஸ்வரூபம்; வள்ளிபம்மை சிவயோக வடிவினர். ஆத லின், நீ அன்றும் இன்றும் என்றும் மணமகன். வித்தக யோகத் தோடு போகம் விளையாடுகின்றது. அது, யோகத்தின் தாகம் தவிர்க்கும் தனி நிலை. ஆரம்பம் இருமை; அந்தத்தில் ஒருமை.

**தன்னந் தனி நின்றது தானறிய**
**இன்னம் ஒருவர்க்கு இசைவிப் பதுவோ**

எனும் நுட்பம் உணராமல், நடிக்கும் நாடகங்களின் கதை கண்டு விபரீதமாக மேலும் விளம்பில், ஆன்ம நஷ்டம் விளையும். அருள் ஞான யோகியான முனிவர் போன்றவர்கள், முதன் மைச் சிவபோகமான முருக வெள்ளத்தில் மூழ்கும் வேட்கையர்.

---

**முள்ளிச் செடிக்கும் முத்திதந்த நின்னருளை**
**கள்ளமகல் உள்ளத்தால் கருத அருளுதியோ.**

அவ் வேட்கை மிகும் போதெல்லாம், வள்ளி சன்மார்க்கம் என்று இதை வாய்மலர்ந்து பாடுவர்; இதுவே இங்குள்ள நுட்பம். அன்பர்கள் இதை உய்த்துணர வேண்டும். மேலும்,

போகியாய் விரிந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியாய் யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரார்
வேகியாறுற் போல் செய்த வினையினை வீட்டல் ஓரார்
ஊகியா மூடர் எல்லாம் உம்பரில் ஒருவன் என்பார்

எனும் சிவஞான சித்தியார், இத்தகைய இடங்களில் இழிவு மனம் கொண்டு பேசுவாரைக் கண்டு, மனம் நொந்து உரைப்பது மறக்கத் தகுவது அன்று.

யோக நிலையில் தாகம் மிக்க வள்ளியார் பொருட்டே, கந்த கிரிப் பெருமான் தணிகையில் வந்து தங்கினன்; மணந்த பின்னும் மகிழ்ந்து வந்து அமர்ந்தான் என்கிறது கந்தபுராணம். பக்தி யோகிகளின் தாகம் தணித்தலின், அப்பதி தணிகைப் பெயர் தாங்கியது.

" அருணையில் இடைக்கழியில் உரக கிரியில் புவியில்
அழகிய செருத்தணியில் வாழ்கற்ப காடவியில்
அறிவும் அறிவு தத்துவமும் அபமிரித வித்தைகளும்
அறியென இமைப் பொழுதில் அறிவித்த வேதியன் "

" இதம் அகிதம் விட்டுருகி, இரவு பகல் அற்ற இடம்
எனதற இருக்கைபுரி யோகப் புராதனன் "

தணிகையில் இருப்பவன் என்பது நினைவில் இருத்தல் நலம்.

" இரவுபகல் அற்ற இன்பவெளி யூடே
விரவி விரவி நின்று உந்தீபற"

என்பது சாத்திரம். இதனாற்றான்,

" பெற்றாலும் இனி ஒருவர், எனைத் தணிகை
வரையகத்தே பெறலும் வேண்டும்;
உற்றாலும் அருந்தவங்கள், அவ்வரைக்கே
உறல் வேண்டும்; உயர்ந்த கல்வி
கற்றாலும், உமது திருப் புகழுமதே
நாடோறும் கற்றல் வேண்டும்
செத்தாலும் இவ்வுடலம், அத்தல மீது உறவேண்டும்
சேந்தனூரே " என்கிறது தணிகைக் கலம்பகம்.

குடைக் கூத்தும் துடிக் கூத்தும் உடைய குமரன், வள்ளி யாருடன் கைகோத்து விளையாடும் குரவைக் கூத்தும் கொண்டவன்.

---

**எள்ளுகின்ற தீமைபல செய்தேனே என்னேயோ**
**விள்ளும் கருணை விமலா மலர்ந்திலதே.**

"மகிழ் குரவையுள் திரியும் வேடிக்கை வேடுவன்'';
வனசரர் கொடிச்சிதனை யாசிக்கும் யாசகன்"
எனவரும் வேடிச்சி காவலன் வகுப்பும் இதனை அறிவிக்கும்.

துன்பத்திலேயே ஊறிய அடியேன், பேரின்பம் எனும் பெயர்க்கு ஏற்ப, களி கூரும் உனைத் துணை தேடுகிறேன்; பட்டதெல்லாம் போதும்; இனியாயினும், வள்ளியார்போல் சுகப்படவே வை என்று தேற்றம்பட வேண்டுகிறேன்.

'தன் கடன் அடியேனையும் தாங்குதல்' என்பது தமிழ்மறை. அதுபோல் நீ ஆண்டான்; அடியவனை என்னைத் தாங்குதல் அன்றோ தருமம்? (கடன்-கடமையுமாம்.)

தாங்கத் தக்க எளியானைத் தாங்கினோம் என்பதில் உமக்குப் பெரும் கௌரவம் உண்டு; அதனால் தான், இது கனமாகும் என்கிறேன். அதுவன்றி, அண்டமெலாம் பேன் முட்டைபோல் மயிர்க்கால் தோறும் தாங்கும் உமக்கு, அடியேனைச் சுகப்பட வைத்தல் பாரமாகாது; ஆதலின், இது கனம் ஆகும் என்றும் கேட்கிறேன்.

''இடைவைத்துச் சித்ரத் தமிழ்கொடு
கவிமெத்தச் செப்பிப் பழுதற
எழுதிக் கற்பித்துத் திரிபவர்''

என்றும் உன்னைத் தொழுபவர்; பலகாலும் உன் திருப்புகழ் பாடுபவர்; தணிகைப் படியில் இருந்து அவர்கள் எப்படிப் பாடினரோ? அப்படிப் பாட நான் ஆசை கொண்டேனே! அவர்கட்கு அருளியவாறு எனக்கும் இரக்கம் காட்டினால் ஆகாதா?

வானவர் செல்வமெலாம் சூரபதுமன் கவர்ந்தான்; அச்செல்வங்களை மீட்டு, தற்பரமுருகா! நீ தணிகையில் வைத்தாய்; அதனால் அம்மலை ஸ்ரீ பரிபூரணகிரி எனும் பெயர் எய்தியது. பதியான திருத்தணி எனும் நாமம் படைத்தது.

சிவனார், உமையாள், கணபதி, நந்திதேவர், திருமால், பிரமன், இந்திரன், முனிவர் அனைவரும் வழிபட வந்து தங்கிய அப்பதி, **சிவலோகம்** என்றும் சிறப்பிக்கப் பெறும். தணிகை-சாந்தி நிகேதனம்; அப்பெயராலும் அது சிவலோகம் அல்லவா!

வைத்திய நாதர் சிவபிரான்; மருந்தீசர் என்பதும் உண்டு; வைத்திய நாதர் மகனான நீயும் வயித்தியநாதன் தானே. பிறவிப் பிணி தீர்க்க உயர்ந்த மலைமேல் ஏறியுளேன். வருக அன்பர்கள்! வருகென்று அங்கிருந்து அறைகூவி யாளும் அத்தா! உன்னை, பிரஹ்ம ஸ்வரூபம் என்று உணர்ந்தேன். ஆதலின், பெருமாளே என்று அடியேனும் பெருங்குரல் கொடுத்துக் கூவுகிறேன்!

---

**பாராசை பொன்னாசை பாவிப்பேய் சேட்டைவிட்டு**
**வாராயென் றென்னை வலிந்தீர்த்தல் செய்யாயோ.**

பிரபு! என் கதையையும் சிறிது சொல்கிறேன்.

தந்தை போய், தாய் போய், தமரும் போய், தாரமும் போய், தாமும் போவார்; மகத்தானதாக எதிரில் காணப்பட்டன எல்லாம் மறைந்துபோம். சென்ற பிறப்பில் தாயானுள்; இப்பிறப்பில் தங்கையானுள்; மற்றொரு பிறப்பில் மனைவியாவள்; தமக்கை, மகள் இப்படி மாறி மாறி வருகிற கதைகளைப் புராண இதிகாசங்கள் புகல்கின்றன. சமுத்திரம் போல் பெருகி வரும் வாழ்க்கை, நிலைபெறுதல் இல்லாமல் மடங்கி முடங்கி வரும் மாயானுபவம்.

சம்-இன்பம்; சாரம்-ரசம். இன்ப ரசம் இருவகை; கம்பீரமாக நிலை பெறும் கடல் போல்வது ஒன்று. அதை இத்திருப்புகழ் ஐந்தாம் அடியில் ஒரு சிறிது அளந்து மகிழ்ந்தேன். அது பேரின்ப ரசம்;

'இன்பரசத்தே பருகிப் பலகாலும்
என்றன் உயிர்க்கு ஆதரவுற்று அருள்வாயே'

என்று அதை முன்னர் ஒருதரம் வேண்டியுளன்.

மற்றொன்று, நிலை பெறுதல் இல்லாத கடல்போல் பெருகுவது; இது சின்ன இன்பச் சேறு.

துறை-ஏறு துறை இறங்கு துறை என இருவகை. எங்கும் இறை சொருபம்; எதுவும் இறைவன் திருமேனி என்று பாவிக்கும் நடையில் வாழ்க்கை அமையின், வளர்ச்சிக்கு இடம் உண்டு. மனையாளையும், உரிய சில நேரம் நீங்கலாக, மற்றநேரமெலாம் பராசக்தியாகப் பாவிக்கும் மனநிலை வளருமாயின், அந்தச் சின்ன இன்பத் துறையும், ஏறுதுறை காட்டிப் பேரின்பக்கரையில் ஏற்றலாம்.

'பெற்ற சிற்றின்பமே பேரின்பமாம்; அங்கு
முற்றவரும் பரிசு உந்தீபற'

மூளையாது மாயையென்று உந்தீபற'' என்பது இங்குள்ள அனுபவம்.

அங்ஙனம் இன்றேல், சார ஹீன சமுசாரம் ஆய்விடும் வாழ்க்கை.

கண்-இடம் எனும் பொருட்டு; மற்று ஆழம், மதகு எனும் பொருளும் அதற்கு உண்டு-மதகு-வேகத்தொடு நீர் அடித்துச் செல்லும் வழி.

எனவே, சம்சாரத் துறையில், அடிப்பட்டுச் செல்லும் வழியில் அழுந்தி விட நேர்கிறதே என்று அழுங்குகிறதே மனம்.

---

பாதகங்கள் பல்லபல பாவிக்கச் செய்தவினை
சாதகமாம் அன்னதனை சதுரழிக்க வாராயோ.

ஓயாமல் அலை வீசும் உவர்க்கடல்; அதுபோல் இன்ப துன்ப அலைகள் சமுசாரத்தில் பெருகி இருக்கின்றன. ஆசைகளாகிய மரக்கலங்கள், சிறுமீன், பெருமீன், சின்ன கூனி, பெரிய கூனி, முதலை, திமிங்கிலங்களைப் போல், சமுசாரத்திலும் நட்பு காட்டி, உறவு கூறி விழுங்கும் கூட்டமும் விரிவாகியுள. கடலில் வயிறு வளர்க்கும் அவைகள் போல், அணுக்க உறவினர் வயிறு வளர்த்து வாழுமிடம் சமுசாரம். இச்சாகரத்தில், காமக்ரோதாதிகள் எனும் மலைகளின் வளர்ச்சியை வரையறுக்க இயலுமோ? கரையும் ஆழமும் காண முடியாதது கடல். அதுபோல் எத்துணை வருவாய் இருப்பினும், இடம் காண ஒட்டாமல், பேரச்சம் பிறப்பிப்பது, நிலையாத சமுத்திரமான சமுசாரம். அட பாவமே!

இடையிடை வரஉம் வயிற்றை நிரப்ப, கலங்காதபடி குடும்பத்தைக் காக்க, நாப்பிளக்கப் பொய்யுரைப்பார்; நவநிதியம் தேடுவார்; புற்றீசல் போல புதல்வர்களைப் பெறுவர்; காப்பதற்கும் வகையறியார்; கைவிடவும் மாட்டார். அகப்பட்டார்; கிடந்துழல வகைப்பட்டார் என்று பாடினாராம் பட்டினத்தடிகள்.

அதுபோல் பிறர் நம்பும்படி அன்றுடம் பேசுவது அளவிலாத பொய்கள்; கால் பொய், அரைப் பொய், முக்கால் பொய், முழுப் பொய்யாகி, அதிலேயே முழுகி விடுகிற மோசமான சூழ்நிலையே முன் வந்து குதிக்கிறது. அதனில் தேர்ச்சி பெற, எத்தனை நாள் உழைப்பு?

ஆவி சாவி யாகாதபடி, உபதேசம் செய்யும் நல்லோர்கள் நட்பில் ஓட்டுவது இல்லை. விரைந்து இரணத்தை ஆற்றும் வெங்காரம்போல், இடித்துரைத்துத் திருத்தும் அவர்களைக் கண்டு ஒளிந்து கொள்வது, பாவத்தின் பயன்தானு?

பரிபூரணகிரி அது; பரிபூரண ஞானமே உமது திருவடி. அந்த ஞானம் சித்திக்க முயன்று, திருவடித் தியானம் செய்து வழிபடாமல் பொழுது வறிது போகிறதே!

இந்த அநியாய வாழ்க்கையில், அளவிலாத நோய்கள் வேறு. இப்படியே, அலைக்கும் பிறவி நோயில் அகப்பட்டேனே!

"செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்!"

பிறவியின் வேர் அறுந்தால் ஒழிய உய்ய வழியில்லை. உன்னை

---

வாய்மை வளர்த்து வழிவழியா வாழடியர்
தூய்மை வழங்க என்கண்முன் தோன்றுயோ.

ஓதி, அவ்வேர் அறுபடும்படி அருள்; முருகானே! அருள்வோனே! பெருமானே! உலகில் அடியேன் உய்திபெற உதவியருள் என்றபடி.

வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை, நின் பெருமை யினால்
பொறுப்பவனே! அராப் பூண்பவனே! பொங்கு கங்கை சடைச்
செறுப்பவனே! நின் திருவருவளால் என் பிறவியை வேர்
அறுப்பவனே! உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே?''

என்ற திருவாசகம் இங்கு எண்ணத் தரும்.

**வாழ்க அருணை முனிவர்! வளர்க உலகம்!!**

<u>அட்டைப்பட விளக்கம்</u>

# நாவுக்கரசரும் சம்பந்தரும்

**(கி. வா. ஜ.)**

சீகாழியில் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் இருந்தபோது அவருக்கு உபநயனம் செய்யும் பருவம் வரவே, மறை விதிப்படி நூலணிந்து மறையவர்கள் வேதங்களை ஓதினார்கள். ஞானப் பாலுண்ட பெருமான் அவர்களெல்லாரும் வியக்கும்படி வேதத்தை ஓதினார். மந்திரங்களின் பொருளை எடுத்துரைத்தார். அது கேட்ட அந்தணர்கள் பெருவியப்பு எய்தித் தமக்கு மறையில் உள்ள ஐயங்களை அக் குழந்தைப் பிரானிடம் கேட்டுத் தெளிந்து கொண்டனர். பின்பு அவர்களுக்குத் திரு வைந்தெழுத்தின் பெருமையை விளக்கி, ''துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்'' என்ற திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

சம்பந்தப் பெருமானுடைய பெருமை தமிழ் நாடெங்கும் பரவியது. அதனைச் செவியுற்ற திருநாவுக்கரசர் அவரைக் கண்டு பணிய வேண்டுமென்ற எண்ணத்தோடு சீகாழியை அடைந்தார். அவர் வருவதை யறிந்த சம்பந்தர்,

---

சொல்லுக் கிணங்காத் துட்டமகன் போலென்மனம்
மல்லுக் கொடுப்பதனை மாதேவா காணாயோ.

"இது நம் நல்வினைப் பேறு" என்று எண்ணி அன்பர் குழாத்தொடும் சென்று எதிர்கொள்ளப் புறப்பட்டார்.

சிந்தையில் இடையறாத பேரன்பும், முதுமையினால் திருமேனியில் தளர்ச்சியும், கந்தையாடை கூட மிகை என்று எண்ணும் வைராக்கிய சீலமும், திருக்கரத்தில் உழவாரப்படையும், எம்பெருமானை எண்ணி எண்ணி உருகி விடும் கண்ணீரும், திருமேனி முழுவதும் பொலிந்த திருநீறுமாகச் சிவவேடச் சிறப்புத் தோன்றத் திருநாவுக்கரசர் வந்தார். அவரைக் கண்டு சம்பந்தர் ஆராத அன்பு மீதூரத் தொழுதார். திருநாவுக்கரசரும் இறைஞ்ச, இருவரும் நலன்களை உசாவி அளவளாவினார்கள். பின்பு ஆலயத்துக்குச் சென்று தோணியப்பனை வணங்கிச் சம்பந்தர் திருமாளிகையைச் சார்ந்தார்கள். நாவுக்கரசருக்கும் அவருடன் வந்த தொண்டர்களுக்கும் விருந்தளித்து உபசரித்தார் சம்பந்தர்.

நாவுக்கரசர் ஞானப் பாலுண்ட பிள்ளையாரோடு சில காலம் அங்கே தங்கித் தலயாத்திரை செய்வதற்காக விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார். அவரை வழியனுப்பி வந்த பிள்ளையார் தம் திருமாளிகையில் தங்கிப் பல வகையான விகற்ப அமைப்பை யுடைய திருப்பதிகங்களைப் பாடினார். அவற்றைத் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவருடைய மனைவியாராகிய மதங்க சூளாமணியாரும் யாழில் இசைத்துப் பாடினார்கள்.

மீண்டும் தலயாத்திரை செய்யும் விருப்பம் மீதூரக் கவுணியர் குலதிலகர் தம் கருத்தைத் தந்தையாருக்கும் பிறருக்கும் கூறினார். தந்தையார், "யான் சில யாகங்கள் செய்ய வேண்டும். அதனால் இங்கே தங்கியிருந்து பின்னால் வந்து சேர்ந்து கொள்கிறேன்" என்று கூறி விடைகொடுக்க, ஆளுடைய பிள்ளையார் தொண்டர் குழாத்தோடும் புறப்பட்டார். இறைவன் அருளிய முத்துச் சிவிகையில் ஏறிச் சிவ

---

புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் என்ற அப்பர்
கண்ணியமாம் வாசகமென் கருத்தூன்ற வைப்பாயோ.

பெருமான் எழுந்தருளியிருக்கும் திருத் தலங்களைத் தரிசிக்கத் தொடங்கினார்.

திருக் கண்ணார் கோயில் முதலிய பல தலங்களைத் தரிசித்து அங்கங்கே செந்தமிழ்ப் பதிகம் பாடித் திருமாந் துறைக்கு வந்து இறைவனைப் பணிந்து பாடினார். பிறகு சோழநாட்டில் காவேரியின் வடகரையில் உள்ள திருப்பாச் சிலாச் சிராமம் என்னும் தலத்தை அணுகினார்.

அப்போது அங்கே இருந்த கொல்லிமழவன் என்பவனுடைய மகள் முயலகன் என்னும் வலிப்பு நோயினால் துன்புற்று வந்தாள். அதை எந்த வகையிலும் போக்க முடியாமல் வருந்திய மழவன் அவளைத் திருக்கோயிலுக்குக் கொண்டு வந்து இறைவனுடைய சந்நிதியில் கிடத்தி வைத்தான். சம்பந்தப் பிரான் வருவதை அறிந்து அவரை எதிர் கொள்வதற்குரிய சிறப்பையெல்லாம் செய்ய ஏவித் தானும் எதிர் சென்று கண்டு அடியில் விழுந்து பணிந்தான்.

சம்பந்தர் திருக் கோயிலுக்கு எழுந்தருளினார். அங்கே சந்நிதியில் கிடந்த பெண்ணைக் கண்டு, "ஏன் இப்படிக் கிடக்கிறாள்?" என்று மழவனைக் கேட்க, "இவள் என் மகள், வலிப்பு நோயினால் இப்படி கிடக்கிறாள், இறைவனே கதி என்று இங்கே கொண்டு வந்துவிட்டேன்" என்றான். அது கேட்டு இரங்கிய பெருமான், "துணி வளர் திங்கள்" என்ற திருப் பதிகம் பாடினார். "இங்கே எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் இவள் வாடச் செய்வது மாண்பாகுமா?" என்ற பொருள் அமையப் பாடினார். உடனே அப் பெண் நோய் தீர்ந்து எழுந்து பிள்ளையாரை வணங்கினாள். கொல்லி மழவனும் வணங்கி உருகினான்.

அங்கிருந்து வேறு பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு கொங்கு நாட்டுக்கு வந்தார் பிள்ளையார். திருச் செங்கோடாகிய கொடிமாடச் செங்குன்றூருக்கு வந்து

---

அங்கே எழுந்தருளி யிருக்கும் அர்த்த நாரீசுவரரைத் தரிசித்துச் சில காலம் தங்கினர். அப்போது வாடைக் காலம் வரவே, தொண்டர்களுக்குக் குளிர்சுரம் வந்துவிட்டது. அதனால் அவர்கள் வருந்துவது கண்ட சம்பந்தர், "அவ்வினை கிவ்வினை" என்ற பதிகம் பாடியருள அப்பிணி நீங்கியது.

பிறகு சம்பந்தப் பிரான் திருப் பாண்டிக் கொடுமுடியைத் தரிசித்துக் கொண்டு கிழக்கு நோக்கிப் பல தலங்களிலும் சென்று வழிபட்டுப் பதிகம் பாடினர். அப்போது வேனிற் காலம் வந்தது. கதிரவன் கதிர்கள் மிக்க வெம்மையை அடைந்தன.

சம்பந்தப் பிள்ளையார் திருப்பட்டீச்சுரத்துக்கு வந்து கொண்டிருந்தார். அப்போது சிவபெருமானுடைய திருவருளால் குழந்தைப் பிரானுடைய வெப்பந் தணியவேண்டுமென்று ஒரு சிவபூதம் முத்துப் பந்தரைக் கொண்டு வந்து நிழல் உண்டாக்கியது. அதனை அடியார்கள் வாங்கிக் கொண்டனர். அந்த நிழலில் சென்று திருக் கோயிலை அடைந்து எம்பெருமானைப் பணிந்து, "பாடன்மறை சூடன்" என்ற பதிகத்தை இசைத்தருளினர், அழுதுலகை வாழ்வித்த பெருமான். (தொடரும்.)

# திருவார்த்தை

(C. V. சுப்ரமண்யம்)

திருவார்த்தை என்பது திருவாசகத்தில் 43-வது பதிகம். அப் பதிகத்தில் அறிவித்து அன்புறுதல் திருவார்த்தை எனப் பாடப் பெற்றது. அறிவித்து என்றால் அறிவை அறிவித்து என்றும், அன்புறுதல் என்றால் அன்பே சிவம் என்றும், அறிவை அறிவதன் பயனாகிய அன்பே சிவமெனத் தெளிந்த மனச் சாந்தியே திரு

---

வாசித்தும் பூசித்தும் வாழ்த்தியுமுன் தண்ணருளை
நேசித்தேன் தேவே நீயேலல் என்றேயோ.

வார்த்தை யாகும். அறிவை அறிவிப்பது குருவின் கருணை வார்த்தை அல்லது உபதேசம். குருவின் உபதேசம் வாக்கு அமிருதம். வாக்கு அமிருதமாகிய திருவாய் மொழி சிஷ்யனின் செவிக்குணவாய் நின்று அந்தக்கரண பரிசுத்த மாக்குவிக்கும். அந்தக்கரண பரிசுத்தம் அடைய அடியார் திருக்கூட்டத்தில் கலந்து மகிழ்ந்து ஒருவர் உரைக்க, மற்றனைவரும் கேட்டு கலந்து பஜனம் செய்தலே சிறந்த சாதனம்.

கந்தர் அநுபூதியில் 43-வது செய்யுளில் 'அன்பருளால் பேசா அநுபூதி பிறந்ததுவே' எனப் பேசப்படுகின்றது. பேசா பூதியானது, வீண் வார்த்தையைப் பேசாமலிருந்து அன்பை வளர்க்கும் உபாயமென்றும், அநுபூதியானது குரு வார்த்தையைப் பேசுவது, அல்லது பாராயணம் செய்வது, அருள் மறவாமையை வளர்க்கும் உபாயமென்றும் கூறப்படும். பேசா பூதியாகிய அநுபூதியானது, அடியார் திருக்கூட்டத்தில் கலந்து பஜனம் செய்வதில் தமக்குத் தாமே ஏற்படும் பிரம்மாநந்த அநுபவமாகும்.

பேசா அநுபூதி பிறத்தலுக்கு மூல காரணம் ஆசா நிகளம் துகளாதலாகும். ஆசையாவது பாசஞானம். அநுபூதியானது பதி ஞானம். பதி ஞானத்திற்கு ஆசையற்ற துறவு காரணம். துறவு அகத் துறவு, புறத் துறவு என இருவகைத்து. அகத் துறவு ஏற்பட துசாமணியாகிய ஜெபமாலை புனைதல். புறத் துறவு ஏற்பட துகிலாகிய காவி வஸ்திரம் தரித்தல். அகத் துறவின் காரியம் அன்பு. புறத் துறவின் காரியம் அருள். அன்பு ஏற்பட குரு பக்தியில் சிறந்து விளங்கும் வந்தனை அல்லது நமஸ்காரமே மூலகாரணம். அருள் ஏற்பட குருபஜனமாகிய பாராயணமே முக்கிய காரணம். ஆக அநுபூதி மண்டபத்தில் வந்தனையோடு கூடிய வழிபாடாகிய அநுபூதி பாராயணம் செய்வதுவே, சுவாநுபூதிநிலைக்கு மூலகாரணமாகும்.

---

**வேடிக்கை யென்றால் விழுந்தடித்துச் செல்லுமனம்
வாடிக்கை யாகவுனை வாழ்த்தும் தொழிலுறுமோ.**

எனவே, குரு பக்தி குரு அருளுக்குக் காரணம் என்றும், குரு அருள் ஆசை யறுதலுக்குக் காரணம் என்றும், ஆசையறுதல் வீண்வார்த்தை ஒழிந்த பேசா பூதிக்குக் காரணம் என்றும், பஜன சாதனம் ஆத்ம ஞான ஆனந்தமாகிய சுவாநுபூதி நிலைக்குக்காரணம் என்றும், சுவாநுபூதி நிலையே குரு பக்தியின் காரியம் என்றும் கூறலாயிற்று,

மேலும் குரு நாதனின் கருணை வார்த்தையின் மகிமை, எண்குண பஞ்சரனாகிய குருவின் பெருமை கூறுவதுவாகும். கருணை வார்த்தை திருப்புகழில் (1) பொதுவதாய், (2) தனி முதலாய், (3) வேதப் பொருளதாய், (4) பொருள் முடிவதாய், (5) பெரு வெளியதாய், (6) ஈறில் கதியதாய், (7) கருதரியதாய், (8) பருகு அமுதமாய் என்று கூறப்பட்டுள்ளது.

(1) யாவர்க்கும் பொதுவா யறியப்படும் அறிவை அறிவித்தல் முற்றுமுணர்தல்.

(2) யாவரும் தனித்தனியாக அடையும் ஆனந்தம் தன்வயத்தனாதல்.

(3) யாவர்க்கும் மூல ஆதாரமாயுள்ள வேதத்தில் பேசப்படும் சொரூபானந்தம், இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல்.

(4) யாவர்க்கும் பொதுப் பொருளாய் விளங்கும் மெய்ப் பொருள் ஞானம், இயற்கை யுணர்வினனாதல்.

(5) யாவர்க்கும் வெட்ட வெளியாய், சகல பேதனாதீதமாய், சகல வாசகாதீதமாய், சகலமா க்ரியாதீதமாய் விளங்கும் சிவரூபம், தூய உடம்பினனாதல்.

(6) யாவர்க்கும் பரமகதியாய் விளங்கும் குரு அருள் பேரருளுடைமை.

(7) யாவராலும் கருதொணாத ஆத்ம ஞான ஆனந்தமாகிய பேரின்பம், வரம்பிலின்பமுடைமை.

---

வீறுதரும் கோயில் விழாக்கண் டுளமுருகும்
பேறுதா! அடியனெனும் பேருந்தா பெம்மானே !

(8) யாவர்க்கும் அமிருதமாகிய ஆத்ம ஞான உணர்வோடு கூடிய சுவாநுபூதி நிலை, முடிவிலாற்றலுடைமை.

குருநாதனின் கருணை வார்த்தையாகிய குரு ஸ்மரணம் மரண பயத்தை மாற்றும் இயல்புடைத்து.

திருவார்த்தையாகிய குரு ஸ்மரணமே குரு பஜனமென்றும், குரு பஜனத்திற்கு மூலகாரணம் அடியார் திருக்கூட்டமென்றும், அடியார் திருக்கூட்டம் கூடுமிடம் அநுபூதி மண்டபமென்றும், அநுபூதி மண்டபத்தில் பாராயணமாகிய பஜனமே மனம் சாந்தியாகிய சுவாநுபூதி நிலை அடைய சிறந்த சாதனமென்றும், திருவார்த்தையின் மகிமை கூறலாயிற்று.

---

## மதிப்புரை

**அகில இந்திய ஆலய வழிகாட்டி:**—விலை 1—8—0; கிடைக்குமிடம்—க. வெ. அருணகிரி முதலியார், கணபதி வாசக சாலை, 97, காமாட்சியம்மன் கோவில் தெரு, காஞ்சிபுரம்.

பாடல் பெற்ற சிவ விஷ்ணு ஸ்தலங்கள், வைப்புத் தலங்கள், ஸ்வாமி, தேவி பெயர்கள், புகைவண்டி மார்க்கம்; பஸ் வசதி முதலிய பல செய்திகளைக் கொண்ட இந்நூல், யாத்ரிகர்கட்குச் சிறந்த துணைபுரியும்.

**வானதீர்த்தம்:**—விலை 0—4—0; கிடைக்குமிடம்—வான தீர்த்தம் பில்டிங்ஸ், 105, ஆஸாத் ரஸ்தா, திருநெல்வேலி.

இப்பெயரால் இருநூல்கள் வந்திருக்கின்றன. முதல் புத்தகம் செய்யுளும் வசனமாகவும், இரண்டாம் புத்தகம் முழுதும் வசன உருவிலும் இருக்கின்றன. வான்மழைபோல் இறையருளால் தோன்றிய கருத்துக்களைத் திரட்டித் தந்திருக்கிறேன் என்கிறார் இதன் ஆசிரியர் ஜி. ஷஹாபுதீன் அவர்கள். கடவுளைப் பற்றியும் உயிர்களைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும் பல இடங்களில் உயர்ந்த கருத்துக்களை ஆசிரியர் இதனில் உதவியுளார்.

---

யூகமழிந் துன்னை யோகமுகத் தாலடியேன்
தாகமொடு வந்து தழுவி மகிழ்வேனே.

## "BLESSED ARE THE PEACE-MAKERS FOR THEIRS IS THE KINGDOM OF HEAVEN"

The Upanishads declare that the establishment of Peace within is the highest goal of spiritual endeavour. They begin and end with an invocation to 'Peace'. "Om! Santhi! Santhi!! Santhi!!!"

Blessed are the souls that are now alive to see the greatest, the mightiest and the biggest nations of the world declare in one voice their faith in the Peace Universal and the united effort to evolve it through *'Panch Seela'*. *'Panch Seela'* with individuals are the virtues of Ahimsa and the practice of the highest religious truths. The ideal has been set. The largest number of nations have accepted it. Aggression stands condemned internationally, socially and economically. Now is the fitting time for all humanity to rise to realise the unity of mankind, nay the unity of all life, thereby to raise the standard of human life to the divine. It is most interesting to see international virtues and failings being debated in the forum of the world-press. Improper accusations may have been made. Many untruths may have been placarded. Still, all these show the vain attempts to cover up the falling off from the governing universal world code of rectitude

which is internally recognised as binding and which is sought, though not successfully, in all cases, to be shown as having been observed. Heaven's grace would seem to have ushered great spiritual giants of the past into the mundane modern world of human affairs of error and misery, to help in the realisation of the great spiritual truths in the universality of world life. We shall pray for the complestest win for the efforts of all the apostles of peace. Mahatma Gandhi started it. It has yielded *Swarajya* realisation, without even a cracker being fired. May Lord help that it may still yield *Universal Peace* within and without.

*Thiruppugal Mani.*

467

கூடல் விதிக்கின்ற வேதம் வழுத்தும்
குமர! நின்தாள்
பாட விதித்த கருணை யெங்கே?
அயில் பாகு எங்கே?
தேட விதித்த பெருமை யெங்கே?
சுர சேனை யெங்கே
நாட விதித்த நலன(து) எங்கே?
நெஞ்சம் நைகின்றதே!

MAHAMAHOPADHYAYA
DR. U ... LIBRARY,
BESANT ... MADRAS-90.

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

Regd. M. No. 3390, Amirthavachani (1956 மார்கழி—அமிர்தவசனி)

468.


# Coffee

**Ours for Quality**

**RAW, ROAST OR GROUND**

**GANESH & CO., (MADRAS), LTD. MADRAS**

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

**சுவர்ண மாளிகை**

**A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.**

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூலவீதி - மதுரை
Tel:—"FAITH" Estd :—1924. Phone :—113


## அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி விரிவுரையுடன்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி | 1 | 0 | 0 |
| " 6 திருவகுப்புகள் | 1 | 8 | 0 |
| ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் | 2 | 0 | 0 |
| ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல் | 1 | 8 | 0 |
| திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள் | 0 | 6 | 0 |
| திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்) | 0 | 12 | 0 |
| கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன் | 1 | 0 | 0 |
| தேவி தாஸர்கள் (அச்சில்) | | | |
| சிவநேயச் செல்வர்கள் " | | | |
| கணபதி பக்தர்கள் " | | | |
| முருகனடியார் " | | | |

**அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1**

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18